## உள்ளே......

பக்கம்


1. பீடிகை ........................................ 19
2. திருக்குர்ஆனின் சிறப்பு ........................................ 21
3. விஞ்ஞான வளர்ச்சியில் முஸ்லிம்கள் ........................................ 27
4. திருக்குர்ஆன் தரும் பொக்கிஷங்கள் ........................................ 36
5. நம் முன்னோர்களும், இன்றைய விஞ்ஞானிகளும் ........................................ 41
6. உலக அதிசயங்களுக்கு திருக்குர்ஆனில் ஆதாரங்கள் ........................................ 47
7. அணுகுண்டு பற்றி திருக்குர்ஆன் தரும் தகவல்கள் ........................................ 54
8. பூமியின் அமைப்பை பற்றி திருக்குர்ஆன்! ........................................ 61
9. திருக்குர்ஆனில் விஞ்ஞானத்தைக் கண்டு அதிசயித்த ஆங்கிலேயர் ........................................ 69
10. கிழக்கும், மேற்கும் இணைய வேண்டும். ........................................ 78
11. திருக்குர்ஆன் வளர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியும் ........................................ 84
12. உலமாக்களும், முஸ்லிம் விஞ்ஞானிகளும் ஒன்றுபட வேண்டும். ........................................ 92


بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# 1. பீடிகை

"(மனிதர்கள் சிந்தித்து ஆராய்ந்து) நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு, இ(ந்த)த் திருக்குர்ஆனை நிச்சயமாக நாம், மிக்க எளிதாக்கியிருக்கிறோம். ஆகவே, (இதனைக்கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் எவரும் உண்டோ?"

—அல்குர்ஆன், அத்: 54, வச: 17

"ஓ மக்களே! நீங்கள் திருக்குர்ஆனை ஓதிவாருங்கள்; அதிலுள்ள அற்புதங்களை தேடிக்கொள்ளுங்கள்."

—அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்)

அல்லாஹ் அருளிய வேதங்களில் திருக்குர்ஆன் ஓர் அற்புதம் நிறைந்த பொக்கிஷமாகவே இருக்கிறது; யார் எந்தக் கண்ணோட்டத்தோடு அதனை ஓதினாலும், அவர்களுக்குள்ள சந்தேகத்தைப் போக்கி தெளிவுபடுத்தி விடுகிறது. விஞ்ஞானிகள், சரித்திராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், சட்ட விற்பன்னர்கள், மருத்துவர்கள், இலக்கிய கர்த்தாக்கள் ஆகிய எத்தகைய துறையிலுள்ளவர்களுக்கும் அருள்மறையாம் திருக்குர்ஆன், அவர்கள் பரிபூரணமாக திருப்திப்படும் அளவில் தன் ஒளியைக் கொண்டு மன நிறைவு கொள்ளச் செய்கிறது.

திருக்குர்ஆனிலுள்ள சில வசனங்கள் 'முஹ்கமாத்'—அதாவது: மனிதன் மனிதனாக வாழ சில சட்ட விதி முறைகள், கட்டளைகள், எச்சரிக்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. சில வசனங்கள், 'முதஷாபிஹாத்'—அதாவது: சில சம்பவங்கள், உதாரணங்கள், முன்னறிவிப்புகள், சூசகங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன.

'முஹ்கமாத்' வசனங்களைப்பற்றி எந்தவிதப் பிரச்சினையுமில்லை; ஆனால், 'முதஷாபிஹாத்' வசனங்களில், அல்லாஹ் மனித மூளைக்கு நிறைய வேலை தந்துள்ளான். சிலவற்றின் பொருளைக் கூறுவதில் மிக எச்சரிக்கை கொள்ள வேண்டியிருக்கிறது சற்று நிதானம் இழந்தாலும் தவறிழைத்தவர்களாகி விடுவோம். சிலவற்றின் பொருள்களை அல்லாஹ்தான் நன்கறிந்தவனாயிருக்கிறான். 'இந்த வசனத்திற்கு இதுதான் பொருள்' என்று எவரும் திட்டமாகக் கூறமுடியாது. உத்தேசமாகக் கூறுவதாயிருந்தாலும், அப்பொழுதும் மிகவும் எச்சரிக்கையுடன்தான் கூற வேண்டும். ஏனெனில், ஒரே வசனத்திற்கு பல பொருள்களும் ஏற்புடையதாகவே விளங்குகின்றன. அதனால்தான் நம் முன்னோர்கள், திருக்குர்ஆனுடைய வசனங்களுக்கு பொருள் எழுதும்பொழுது, ஆயிரம் வருடங்களுக்கு முன் தரப்பட்ட அதே பொருள்களையே திரும்பத் திரும்பக் கையாண்டு வந்துள்ளனர். அல்லாஹ்வுடைய வசனங்கள் பற்றி அவற்றின் பொருள் பற்றி அவர்கள் கொண்டிருந்த அச்சமே அதற்குக் காரணமாயிருந்தது.

கல்விமான்களில், 'ராஸிகூன ஃபில் இல்ம்—கல்வியில் முதிர்ச்சியடைந்தவர்கள்' சிலரும் உண்டு. இத்தகையவர்கள், 'முதஷாபிஹாத்' வசனங்களுக்கு இயன்றவரை பொருத்தமான பொருள் கூற முடியும். ஒரே வசனத்திற்கு பல கருத்துக்களை கூறும் அறிவாளிகளும் நம்மிலுண்டு.

விஞ்ஞான ஒளியில் திருக்குர்ஆன் வசனங்களைப் பரிசீலித்து அல்லாஹ்வுடைய குர்ஆன் உலக முடிவுவரை பயன்படக்கூடியது; எத்தகைய நூதனக் கண்டுபிடிப்புகளுக்கும் திருக்குர்ஆனில் ஆதாரமுண்டு. திருக்குர்ஆனும், இஸ்லாமிய விதிமுறைகளும் எக்காலத்திற்கும் ஏற்புடையது என்பதை திட்டவட்டமாக நிரூபித்துக் காட்ட வேண்டுமென்பது எம் நீண்டநாளைய அவா. இந்தக் குறிக்கோளை 26-6-87 "மறுமலர்ச்சி" வார இதழிலும் ஒரு கட்டுரை மூலம் வற்புறுத்திக் கூறியிருந்தோம். இக்கட்டுரையை கண்ணுற்ற நம் நண்பர்கள் பலர், நம்மையே இத்தகைய கண்ணோட்டத்தோடு ஒரு நூலை உருவாக்க வற்புறுத்தினார்கள். அதன் விளைவே இச்சிறு நூல்.

## 2. திருக்குர்ஆனின் சிறப்பு!

"இது, வேத நூல்; இதில் சந்தேகமே இல்லை; பயபக்தியுடையவர்களுக்கு (இது) நேரான வழியைக் காட்டும்."

—அத்-2, வச-2

"ஒரு மனிதன் திருக்குர்ஆனின் (ஞான) பாக்கியத்தை அடைந்தபின், மற்றொரு பாக்கியம் அளிக்கப்பட்டிருக்கும் ஒருவனைத் 'தன்னிலும் சிறந்த பாக்கியசாலி' எனக் கருதுவானாயின், அவன் தனக்கு அல்லாஹ் திருக்குர்ஆனின் மூலம் அளித்த சன்மானத்தை இழிவு படுத்தியவனாவான்."

—அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்)

அல்லாஹ், தன் அடியார்கள் நேர்வழி பெற வேண்டுமென்ற நோக்கத்தில், ஓரிலட்சத்து 24—ஆயிரம் நபிமார்களை (இறைத் தூதர்களை) இவ்வுலகில் அனுப்பினான். அவர்களில் சிலருக்கு பலகைகள் மூலமாகவும், சிலருக்கு வேதங்கள் மூலமாகவும் வசனங்களை அருளினான். அத்தகைய தொடரில் கடைசி நபியாக வந்தவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தபா ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். மூலமாக அருளப்பட்ட வேத நூலின் பெயரே திருக்குர்ஆன்.

நபிகள் நாயகம் (ஸல்–அம்) அவர்களும், திருக்குர்ஆனும் உறுதியாக்கப்பட்டு விட்டதால், மனிதனுக்கு உலக முடிவுவரை ஏற்படக்கூடிய எல்லாத் தேவைகளையும், விளக்கங்களையும், வழிமுறைகளையும் இவர்களைக் கொண்டே பூர்த்தி செய்ய அல்லாஹ் முடிவு செய்தான். எனவே, எல்லாச் சிறப்புகளையும், இவர்களுக்கு வழங்கி நிறைவுபடுத்தி விட்டான். இனி, உலக முடிவுவரை வரக்கூடிய—இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய எல்லா மக்களும், அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்–அம்) அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்தால் தான் விமோசனமுண்டு; திருக்குர்ஆன் கூறும் அறிவுரைகளையும், விதிமுறைகளையும் ஏற்று நடந்தால்தான் மனிதன் மனிதனாக வாழ முடியும். இது, இறுதியான முடிவாகும்.

## திருக்குர்ஆன் எப்படி சிறந்தது?

உலகிலே எத்தனையோ வேத நூற்கள், இதிகாசங்கள், புராணங்கள், கிரந்தங்கள் இருந்தும் திருக்குர்ஆனுக்கு மட்டும் எப்படி இவ்வளவு சிறப்பு வந்தது? என எவரும் ஐயமுறுவது இயல்பே. திருக்குர்ஆனைத் தவிர மற்ற அனைத்தும் சிறப்பிழந்தும், பொலிவிழந்தும் காணப்படுவதற்கு காரணம் அவையனைத்தும் கலப்படமாகிவிட்டன. சில கற்பனை கூளங்களாகி விட்டன; சில ஆபாசக் களஞ்சியமாகிவிட்டன.

ஆனால், திருக்குர்ஆன் மட்டும் அது அருளப்பட்டு 14–நூற்றாண்டுகளாகியும், இதுவரை ஓர் எழுத்து, ஒரு புள்ளிகூட மாறாத நிலையில் அமைந்துள்ளது. இன்ஷா அல்லாஹ்—அல்லாஹ் நாடினால், இறுதிநாள்வரை அப்படியே இருந்துவரும். உண்மையில் இது ஒரு மாபெரும் அற்புதமே! இதனை மாற்றியமைத்துவிட வேண்டுமென்று எண்ணியவர்கள், இதிலுள்ளதைப்போல சில வசனங்களை எழுதி விடலாம் எனக் கருதியவர்கள் எல்லாம் அக் காலத்திலேயே தோல்வி முகம் கண்டனர்; இன்றும் கண்டு வருகின்றனர்.

## கவிஞன் கண்ட தோல்வி!

நாயகத் தோழர்கள் உயிருடனிருந்த காலத்திலேயே முஸ்லிமல்லாத கவிஞன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் அரபி மொழியில் சிறந்த பாண்டித்தியம் பெற்றவனாயிருந்தான். எத்தகைய கவிதைகளிலும் குற்றம் கண்டுபிடித்து, எதிரியை நாணமுறச் செய்வதில் வல்லவன். தன் வீட்டின் முற்றத்தில் ஒரு தனி அறையை வைத்துக்கொண்டு, அதன் சுவற்றில் இரு துவாரங்களை ஏற்படுத்தியிருந்தான். தங்கள் கவிதைகளை திருத்திக்கொள்ள விரும்புபவர்கள், ஒரு துவாரத்தின் வழியாகத் தம் கவிதையை உள்ளே தள்ளுவார்கள்; ஒரு சில நிமிடங்களில் அக்கவிதையைத் திருத்தி, மறு துவாரத்தின் வழியாக வெளியே வீசியெறிவான். தன் கல்வி ஞானத்தில் அவ்வளவு இறுமாப்பு அவனுக்கு.

ஒரு நாள்; நாயகத் தோழரொருவர், திருக்குர்ஆனிலுள்ள 108–ஆம் அத்தியாயமான 'அல் கவ்தர்—எண்ணற்ற நன்மைகள் என்ற மிகச் சிறிய மூன்றே வசனங்கள் கொண்ட அத்தியாயத்தை ஒரு தனித்தாளில் எழுதிக் கொண்டு அந்த கவிஞனிடம் வந்து, "இதிலுள்ள குறைகளைத் திருத்திக்கொடு!" என்றார்.

வெகு அலட்சியமாக அத்தாளை வாங்கிய அக் கவிஞன், அதிலுள்ளவற்றை இரண்டு மூன்று முறை படித்துவிட்டு, அதைக் கொண்டுவந்த நாயகத் தோழரிடம், "இப்பொழுது எனக்கு சில வேலைகளிருக்கின்றன; நாளை வாரும், திருத்தித் தருகிறேன்!" என்றான்.

'சரி' என்று கூறிச்சென்ற நாயகத் தோழர் அடுத்த நாள் அவனிடம் வந்து, "நான் கொடுத்தது திருத்தி யாகிவிட்டதா?" என்று கேட்டார்.

அவரைக் கண்டதுமே கவிஞனின் முகத்தில் வியர்வை துளிர்த்தது; வாழ்வில் காணாத ஒரு தோல்வியைத் தழுவி மீண்டும் இவ்வுலகில் எப்படி வாழ்வது? என்ற கவுரவப் பிரச்சனை அவனை வாட்டி வதைத்தது. என்றாலும் சமாளித்துக்கொண்டு, "அவசர வேலைகள் அதிகம் இருந்ததால், உம் கவிதையை திருத்தித்தர எனக்கு நேரமில்லை; நாளை வாரும்!" என்றான்.

நாயகத் தோழர் புன்முறுவலித்துக்கொண்டு சென்று விட்டார். கவிஞனுக்கோ இருப்புக் கொள்ளவில்லை. அவர் கொடுத்துச்சென்ற துண்டுச் சீட்டை கண்டதிலிருந்து—அதிலிருந்த வாசகங்களைப் படித்ததிலிருந்து அவன் ஊண், உறக்கம் எல்லாவற்றையும் மறந்து போனான். ஒரிருமுறை மட்டுமல்ல; பல நூறு தடவை அவன் அந்த வாசகங்களைப் படித்துப் படித்து, அதில் ஏதேனும் குற்றம் கண்டுபிடிக்க முடிகிறதா? என்று கஜகர்ணம் போட்டுப் பார்த்துவிட்டான். அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது.

மூன்றாம் நாள்; குறிப்பிட்ட நேரத்தில் நாயகத் தோழர் அவனிடம் வந்தார். "என்ன, எத்தனை குறைகள் அதில் காணப்படுகின்றன? எந்த இடத்தில் தளை தட்டுகிறது? எந்த முறையில் எதுகை, மோனை பிழையுள்ளது?" என்று கேட்டார்.

வீட்டிற்குள்ளிருந்தவாறே ஆணவத்துடன் பேசும் சுபாவமுள்ள அந்தக் கவிஞன், தடாலென்று கதவைத் திறந்து வெளியே வந்து நாயகத் தோழரின் காலை பிடித்துக் கொண்டு, "உண்மையைச் சொல்லும்! இது நீர் எழுதிய கவிதை அல்ல; உம்மைப்போல வேறொரு மனிதரும் எழுதியிருக்கவும் முடியாது! நான் தோற்றுப் போனேன்; நான் கொண்டிருந்த அகங்காரம், ஆணவம், மமதை, எல்லாம் அழிந்து, மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்டது" என்று கதறியவாறு தேம்பித் தேம்பி சிறு குழந்தை மாதிரி அழுவாரம்பித்து விட்டான்.

நாயகத் தோழர் அவனைச் சமாதானப்படுத்தி, விவரத்தை விளக்கி, அவன் திருந்தி விட்டதைக்கண்டு அவனைப் பாராட்டிச் சென்றார்.

இப்படி பல வரலாற்றுச் சம்பவங்களை நாம் சரித்திர ஏடுகளிலே காண முடிகிறது.

## அழியாக் காவியம் திருக்குர்ஆன்!

"(இந்நிராகரிப்போர் பொய்யாக்கும்) இந்த மேலான திருக்குர்ஆன், 'லவ்ஹுல் மஹ்ஃபூளி'லும் (பதிவு செய்யப்பட்டு பாதுகாப்பாக) இருக்கிறது"—அத்: 85; வச—21, 22

தன்னுடைய திருக்குர்ஆனை தானே பாதுகாப்பதாக அல்லாஹ் பிரகடனப்படுத்திவிட்ட பிறகு, எந்த மனித சக்தியால்தான் அதனை மாற்ற—திருத்த—அழிக்க முடியும். எனவேதான் அது ஓர் அழியாக் காவியமாக இன்று உலகில் உலவி வருகிறது.

உலகில் எந்த ஒரு நூலிலும், திருக்குர்ஆனைப் போல இத்தனை பாகம், இத்தனை அத்தியாயம், இத்தனை வசனங்கள், ஒவ்வோர் எழுத்திலும் இத்தனை மேல்கோடு, கீழ்க்கோடு, புள்ளி என்று மிகத் துல்லியமாக கணக்கிடப் படவில்லை. பல இலட்சக்கணக்கானோர் நெஞ்சங்களிலே இப்படி பாதுகாக்கப்படவில்லை. குறளை யாரோ ஒருவர்

மனப்பாடம் செய்துவிட்டதாக நடந்த பாராட்டுக் கூட்டங்களையும், அவர்களுக்குத் தந்த கவுரவப் பட்டங்களையும் கண்டு நம்மால் சிரிக்காதிருக்க முடியவில்லை. ஏனெனில், திருக்குர்ஆனை மனப்பாடம் செய்யும் சாதனையை சாதாரணமாக ஓர் எட்டு வயது முஸ்லிம் பாலகன் செய்து காட்டிவிடுகிறான்.

# 3. விஞ்ஞான வளர்ச்சியில் முஸ்லிம்கள்!

"வானங்களிலும், பூமியிலும் உள்ளவற்றை நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தி தந்திருக்கிறான் என்பதையும், அவன் தன் அருட்கொடைகளை மறைவாகவும், வெளிப்படையாகவும் உங்கள்மீது சொரிந்திருக்கிறான் என்பதையும் நீங்கள் பார்க்க வில்லையா?"

—அத்: 31, வச—20

"ஒரு வணக்கஸ்தரைவிட ஓர் அறிஞருக்குள்ள மதிப்பாகிறது உங்களில் ஒரு சாதாரண மனிதனைவிட எனக்கிருக்கும் மதிப்பைப் போன்றதாகும்."

—அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்)

மார்க்கங்களில் சிறந்தது இஸ்லாம்! நபிமார்களின் தலைவர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்) வேதங்களில் சிறந்தது திருக்குர்ஆன்! சமுதாயங்களில் சிறந்தது முஸ்லிம் சமுதாயம்! மக்களில் சிறந்தவர்கள் முஸ்லிம்கள்! பண்டைக்கால சரிதைகளை ஆராயும்பொழுது முஸ்லிம்கள் எல்லா துறையிலும் சிறந்தோங்கி விளங்கி வந்தார்கள்.

கல்வி—கேள்விகளில், நீதி—நிர்வாகத்தில், ஆட்சி—அதிகாரம் புரிவதில், விஞ்ஞான வளர்ச்சியில், கலாச்சாரத்தில், நவநாகரீக வாழ்வில் ஆகிய எல்லாத் துறை

களிலும் மேம்பட்டு விளங்கினர். ஐரோப்பாவில் ஸ்பெயின் நாட்டை முஸ்லிம்கள் 800-வருடங்கள் ஆண்டுள்ளனர். அப்பகுதிகளில் காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்த யூத-கிறிஸ்தவர் சமுதாயத்தினருக்கு நாகரீகம் கற்றுக் கொடுத்த பெருமை முஸ்லிம்களையேச் சாரும். லண்டன் மாநகரில் தெரு ஓரங்களில் சாக்கடையைக் கட்டி, கழிவுநீரை தெரு ஓரமாக ஓடச் செய்வதிலும், தெரு முனைகளில் விளக்குகளை அமைத்து வெளிச்சம் ஏற்பட செய்வதிலும் இவைபோன்ற இன்னும் பல சீர்திருத்தமான காரியங்களிலும், முஸ்லிம்கள் தாம் அவர்களுக்கு முன்னோடியாக இருந்துள்ளனர்.

## வெந்நீர்—தண்ணீர் அதிசயம்!

இந்தியாவிலும், முஸ்லிம்கள் தொடர்ந்து 800-வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்துள்ளனர். அவர்களின் நேர்மையான ஆட்சிமுறையைக் கண்ட முஸ்லிமல்லாத இதர சிற்றரசர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களையெல்லாம் அந்த முஸ்லிம் மன்னர்களிடமே ஒப்படைத்து விட்டநாக சரித்திர ஏடுகளில் ஆதாரம் காண்கிறோம்.

இத்தோடு மட்டுமல்லாது, அக்காலத்து முஸ்லிம்கள் விஞ்ஞானத்தில் மிகவும் உச்சக்கட்டத்திலிருந்து வந்தனர். விதவிதமான நூதனங்களைக் கண்டுபிடித்து, முஸ்லிமல்லாதாரைப் பேராச்சரியத்தில் ஆழ்த்தினர். ஒரே தொட்டியிலிருந்த தண்ணீரை, தொட்டிக்குள் ஒரு விளக்கைப் பொருத்தி, தொட்டியின் ஒரு பகுதி தண்ணீர் சூடாகவும், மறு பகுதியிலிருந்த தண்ணீர் குளிர்ச்சியாகவும் இருக்கச் செய்தனர். இத்தகைய ஒரு தண்ணீர்த் தொட்டி டில்லியிலுள்ள ஒரு மஸ்ஜிதில் 'ஹவுலா'கப் பயன்பட்டு வந்தது. ஆங்கிலேயர்கள் இந்நாட்டை கைப்பற்றியபின், இந்த அதிசயத்தை கண்டுபிடிக்கும் ஆவலில், தொட்டியிலுள்ள நீரை காலி செய்து, எரிந்துக் கொண்டிருந்த விளக்கைத் தோண்டி வெளியிலெடுத்தனர். அத்தோடு தொட்டி நீரின் 'வெந்நீர்-தண்ணீர்' அதிசயம் அழிந்து போய்விட்டது.

இதேபோன்று ஓர் அதிசயத்தை ஒரு வாத்தியத்தில் செய்து காட்டியிருந்தனர். அந்த வாத்தியத்தை குறிப்பிட்ட ஒரு வகையாக வாசித்தால், அதன் நாதத்தைக் கேட்பவர்களெல்லாம் அழவாரம்பித்தனர். அதே வாத்தியத்தை மற்றொரு வகையாக வாசித்தால், அதிலிருந்து எழும் நாதத்தை கேட்பவர்களெல்லாம் விழுந்து விழுந்து சிரிக்கவாரம்பித்து விடுவர். இப்படி எத்தனையோ அற்புதங்களை, அதிசயங்களை அக்காலத்தில் முஸ்லிம்கள் செய்து காட்டி வந்தனர்.

## ரஷ்யாவுக்கு வழிகாட்டியது அரபி விஞ்ஞானிகளே!

இரண்டாம் மகா யுத்தம் நேச தேச நாடுகளுக்குச் சாதகமாக முடிந்தது; இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் தோல்வியடைந்தன. பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா வெற்றியடைந்தன. கைதிகளாகப் பிடிபட்ட ஜெர்மனியர்களை ரஷ்யாவும், அமெரிக்காவும் பங்கு போட்டுக்கொண்டு, கைதிகளிலிருந்த விஞ்ஞானி களைக்கொண்டு விஞ்ஞானத்தில் முன்னேறின என்ற சொல்லப்படுகிறது. ரஷ்யாவின் முன்னேற்றத்தை இந்த காரணத்தைக் கூறியே அமெரிக்கா அடிக்கடி சாடி வந்தது—

இதனை மறுத்து, மாஸ்கோ வானொலி 20-11-67 தேதியில் கீழ்வரும் செய்தியை ஒலிபரப்பியது:

''ஜெர்மனி நாட்டு விஞ்ஞானக் கைதிகளின் உதவியால்தான் நம் நாடு விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டதாக அமெரிக்கா பிரச்சாரம் செய்து வருவது சுத்த

அபத்தமாகும். நமக்கு பல வருடங்களுக்கு முன்னதாகவே, ஸ்பெயின் நாட்டு அரபு விஞ்ஞானிகள் எழுதிய 800–வருட காலத்துப் பழைய நூற்கள் கிடைத்தன. அந்நூற்களில் தரப் பட்ட குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டுதான் நாம் சந்திர மண்டலத்திற்கு ராக்கெட் மூலம் செல்லும் வாய்ப்பை பெற் றோம் என்ற இரகசியத்தை இன்று உலகிற்கு வெளிப்படுத்து கின்றோம்.''

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? அக் காலத்து முஸ்லிம்கள், விஞ்ஞானத்தில் மிகத் தீவிரமாக வளர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதையும், அந்த வளர்ச்சிக்கு திருக் குர்ஆன் உதவி செய்து வந்துள்ளது என்பதையும் நம்மால் யூசிக்க முடிகிறது.

இந்த நிலை இன்று ஏன் மாறிவிட்டது? அல்லாஹ் வின் கிருபையால் முஸ்லிம் நாடுகள் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன. விஞ்ஞானத்தில் வளர்ச்சி யடைய வேண்டுமென்று அவை நாடினால், அமெரிக்கா, ரஷ்யாவைவிட எத்தனையோ படிகள் முன்னேறி இருக்கலாம். அதற்குரிய பொருளாதார வசதிகள் முஸ்லிம் நாடுகளிடம் நிறைய இருந்தும், நவீன கண்டுபிடிப்புகளை பெறுவதில் அவை ரஷ்யாவையும், அமெரிக்காவையுமே நாடவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த இரு நாடுகளும், தாம் தயாரிக்கும் நவீன கண்டுபிடிப்புகளுக்கும், நவீன யுத்தக் கருவிகளுக்கும் விற்பனை செய்ய முஸ்லிம் நாடு களையே மார்க்கெட்டுகளாகப் பயன்படுத்தி வருகின்றன. இந்த இழிவு நிலை இத்தோடு நிற்கவில்லை. இந்த இரு நாடுகளும் வெகு சாமர்த்தியமாகச் செயல்பட்டு, முஸ்லிம் நாடுகளைப் பிரித்து, தத்தம் சார்பில் கட்சி சேர்த்துக் கொண்டன. இதனால், முஸ்லிம் நாடுகளிடையே பகைமை வளர்ந்து, சில நாடுகள் அமெரிக்கா பக்கம் சாய்ந்து அது சொல்கிறபடி ஆடுகின்றன; இது, இஸ்லாத்திற்கே மாபெரும் அவ மானமாகும். புதிய முஸ்லிம் நாடுகள் விஞ்ஞான வளர்ச்சியில் கூட்டாகச் செலவழித்தால், அதன் மூலம் நவீன கண்டுபிடிப்புகளையும், நவீன போர்க்கருவிகளையும் தயாரித்து, அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும் அவற்றை விற்கும் ஆற்றலைப் பெற்றுவிடலாம். சற்றே சிந்தித்தால், இத்தகைய ஓர் அரிய நிலை ஏற்பட வெகு காலம் ஆகாது.

## பாக். அதிபரின் பேருரை!

இன்று விஞ்ஞான வளர்ச்சியில் பாக்கிஸ்தானை தவிர இதர எல்லா முஸ்லிம் நாடுகளும் மிகவும் பின் தள்ளப்பட்டே காணப்படுகின்றன. திருக்குர்ஆன் பொக்கிஷத்தை வைத்துள்ள முஸ்லிம் சமுதாயம் பொதுவாக எல்லா நாடு களிலும் விஞ்ஞான வளர்ச்சியில் கவலைப்படாத நிலையி லேயே இருந்து வருகிறது. இந்த நிலை மாற வேண்டும்; உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

1987, ஜூன் மாதம் 17–ஆம் தேதியில் கராச்சியில், 'குர்ஆனும் விஞ்ஞானமும்' என்ற தலைப்பில் பல்வேறு ஆராயச்சியாளர்கள் தம் ஆராய்ச்சிக் கட்டுரைகளை கருத்தரங்கில் சமர்ப்பித்தனர். இந்த ஆராய்ச்சியாளர்களின் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசிய பாக்கிஸ்தான் ஜனாதிபதி ஜியாவுல் ஹக் ஓர் அரிய உரை நிகழ்த்தினார். அதன் சாரம் வருமாறு:

''இன்றைய உலகில் விஞ்ஞான அறிவு மிக வேக மாக வளர்ந்து வருகிறது; இருபது, முப்பது ஆண்டுக ளுக்கு முன்னர், நாம் கற்பனை செய்து பார்க்காத காரியங்கள் எல்லாம் இன்று உண்மையாகி நடை முறைக்கு

வந்துவிட்டன. நம் இஸ்லாமிய மார்க்கம் விஞ்ஞானத்தை ஏற்றுக்கொள்ளும் மார்க்கமாகும். விஞ்ஞான அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள் என ஏவும் மார்க்கமாகும். எனவே, விஞ்ஞான வளர்ச்சிக்கும், இஸ்லாத்திற்குமிடையில் மோதல் இல்லாதபடி நம் மார்க்க அறிஞர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## விஞ்ஞானம் பற்றி உலமாக்களின் பங்கு என்ன?

''1400 ஆண்டுகளுக்கு முன்னரே நம் வேத நூல் திருக்குர்ஆன் அருளப்பட்ட போதிலும், உலகம் எந்த திசையில் போய்க்கொண்டிருக்கும் என்ற உண்மையை அதில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல் – அம்) அவர்களின் பொன் மொழிகள் இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. எனவே, திருக்குர் ஆனுக்கும், நபி மொழிகளுக்கும் வியாக்கியானங்கள், விளக்கங்கள், அர்த்தங்கள் கொடுக்கும்பொழுது நம் மார்க்க அறிஞர்கள் நூதன கண்ணோட்டத்துடன் உண்மை நிலவரங்களை ஆராய வேண்டும். அதற்கு தக்கவாறு வியாக்கியானங்களை வழங்க வேண்டும். விஞ்ஞானமும், மார்க்கமும் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் நிலையை அப்பெரியார்கள் ஏற்படுத்திவிடக் கூடாது.

''குறுகிய கண்ணோட்டத்துடன் அல்லது குறுகிய வட்டத்திற்குள் நின்று உலக வளர்ச்சியை எடைபோட்டுக் கொண்டிருக்கக்கூடாது. விஞ்ஞானத்தைப் பற்றி சில தவறான அபிப்பிராயம் ஒரு சில உலமாக்களிடம் காணப் படுகிறது. இந்த நிலை நீடிக்குமானால், உலகப் பார்வையில் இஸ்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும். 'ஏனைய மார்க்கங்களைப் போலத்தான் இதுவும்' என்ற கருத்து வளர ஆரம்பித்துவிடும் 'விஞ்ஞான வளர்ச்சியைத் தாக்குப்பிடிக்கக் கூடிய மார்க்கமே இஸ்லாம்' என்ற உண்மையை நாம் உலகிற்கு நிரூபித்துக் காட்டிவிட வேண்டும்.

## முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதேன்?

''அண்மையில் ஓர் அமெரிக்க அறிஞருடன் நான் உரையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் சொன்னார்: ''மத்திய காலங்களில் விஞ்ஞானத்தை வளர்த்தவர்களில் முஸ்லிம்களே அதிகம் இருந்தனர். ஐரோப்பாவில் விஞ்ஞானத்தை அறிமுகப்படுத்தியவர்களே முஸ்லிம்கள்தாம். ஆனால், விஞ்ஞான அறிவைப் பெருக்குவதில் அவர்கள் ஈடுபட்டிருந்தது அத்தோடு நின்று விட்டது. அதற்குப்பிறகு அந்த முயற்சி நீடிக்கப்படவில்லை. ஏனோ அவர்கள் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர்.

"கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தொழில் புரட்சி ஏற்பட்டது. மக்களின் வாழ்க்கைத்தரம் வெகுவாக முன்னேறியது. இத்தொழில் புரட்சி இஸ்லாமிய நாடுகளிலும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள்தாம் விஞ்ஞானத்தை வளர்த்தவர்கள், ஒரு கால கட்டத்தில் அவர்களின் பார்வை வேறு பக்கம் திரும்பிவிட்டதால், இத்தொழில் புரட்சி முஸ்லிம்கள் இல்லாத பகுதியில் நடைபெற வேண்டியதாயிற்று.

"அன்று மட்டும் இல்லை; இன்றும்கூட முஸ்லிம் நாடுகள் தொழில் துறையில் பின்தங்கிய நாடுகளின் வரிசையிலேயே இருக்கின்றன. உலகில் தொழில் துறையில் முன்னேறிய நாடுகளில் ஒரு முஸ்லிம் நாடு கூட இல்லையே! இதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டார் அந்த அமெரிக்க அறிஞர்.

## முஸ்லிம் விஞ்ஞானிகள் அக்கறை காட்டாததேன்?

"இது குறித்து முஸ்லிம் அறிஞர்கள் சிந்திக்க வேண்டும். அமெரிக்கரின் இந்த கேள்விக்கு பதில் காண வேண்டும். இச்சூழ்நிலையை மாற்றி அமைக்க முன்வர வேண்டும். உண்மையான தடங்கல்களை கண்டுபிடித்து, அவற்றைக் களைய வேண்டும். இத் துறையில் உலமா பெருமக்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய பங்கு கொஞ்ச நஞ்சமல்ல.

"உலகில் இன்றைய தினம் இருபது இலட்சம் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. எல்லா நாடுகளின் ஆராய்ச்சியாளர்களுடைய மொத்த கணக்கு இது. ஆனால், இவற்றில் இருநூற்றுக்குப்பட்டவையே முஸ்லிம் அறிஞர்களால் தயாரிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளாகும். ஏன் இந்த தேக்க நிலை? முஸ்லிம் ஆராய்ச்சியாளர்கள் ஏன் அதிக அளவில் விஞ்ஞான வளர்ச்சிகளில் அக்கறை காட்ட வில்லை?

## முஸ்லிம் விஞ்ஞானிகளை உலமாக்கள் ஊக்குவிக்க வேண்டும்!

"அமெரிக்காவில்தான் ஆராய்ச்சிகள் அதிக வேகத்தில் நடைபெறுகிறது. மூன்றாம் உலகைச் சார்ந்த நாடுகளின் அறிஞர்கள் (பெரும்பாலும் முஸ்லிம்கள்) அமெரிக்காவுக்குத்தான் சென்று தங்களின் ஆராய்ச் களை தொடருகிறார்கள். அத்துறையில் அபிவிருத்தியும் செய்து கொள்கிறார்கள். இவ்வாறு ஆராய்ச்சியில் அவர்கள் தேர்ச்சி பெற்றதும் தங்களின் அந்தப் பணி முடிந்ததும், அவர்கள் தங்கள்



தங்கள் தாய்நாடுகளுக்கு திரும்பி, தங்களின் ஆராய்ச்சிகளின் பலன்களை அவர்களின் தாய்நாட்டைச் சார்ந்த மக்கள் அனுபவிக்கும்படி செய்ய வேண்டும். இதுதான் நியாயம்! இந்த முறை தான் சரியானது! இப்படிப்பட்டவர்களை மார்க்க அறிஞர்கள் ஊக்குவிக்க வேண்டும்! திருக்குர்ஆன், நபி மொழிகளின் ஆதாரங்களை எடுத்துக் காட்டி இந்த ஆராய்ச்சியாளர்களை உற்சாகப்படுத்த வேண்டும். இதைத்தான் இன்றைய தினம் அவர்களிடமிருந்து இஸ்லாம் எதிர்பார்க்கிறது.

## முஸ்லிம்கள் பிரகாசமாக வாழ வழி என்ன?

"நம் மார்க்கம் துறவறத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வுலக வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு, மறு உலகத்தைப் பற்றியே சிந்திக்கும்படி கட்டளையிடவில்லை. இவ்வுலகின் எல்லா நலன்களையும், சுகங்களையும் பெற்று வாழ்ந்து கொண்டே, மறு உலகிற்கு ஆயத்தம் செய்ய வேண்டும் என்றுதான் நம் மார்க்கம் நமக்கு கட்டளையிடுகிறது. எனவே, இவ்வுலக வாழ்வை உதறித் தள்ளுவது என்பது இஸ்லாத்திற்கு முரணான கொள்கையாகும். இவ்வுலக முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் பல வகையிலும் நன்கு கைகொடுக்கிறது. எனவே, இதனை உலமாக்களும் நன்கு ஊக்குவிக்க வேண்டும். 'மார்க்கக் கல்வி' என்றும், 'உலகக் கல்வி' என்றும் இரண்டாகப் பிரித்து, உலகக் கல்வியை பின்னுக்குத் தள்ளிவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வருங்கால விஞ்ஞான சவால்களுக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் முஸ்லிம்கள் பிரகாசமாய் வாழ முடியும்.

### பாக். அதிபரின் மதிப்பீடு என்ன?

பாக்கிஸ்தான் ஜனாதிபதி ஜியாவுல் ஹக்கின் பேச்சில் நாம் சிந்திக்க வேண்டிய பல அம்சங்கள் பொருந்தியுள்ளன. முஸ்லிம்கள் எந்தத் துறையிலும் பின்தங்கியவர்களாக இருந்துவிடக்கூடாது என்ற பெருங் கவலையில் அந்த கருத்தரங்கில் அவர் பேசியிருக்கிறார் என்பது நமக்கு நன்கு புலனாகிறது. வெளிநாடுகளுக்குச் சென்று விஞ்ஞானத்தில் தேர்ச்சிபெற்ற முஸ்லிம்கள் தம் தாய்நாடுகளுக்குத் திரும்பி தம் சேவையால் தம் தாய்நாட்டின் கவுரவத்தை உயர்த்த வேண்டும் என்பது பாக்கிஸ்தான் அதிபரின் மற்றொரு கவலை. அதற்கு இரண்டு காரணங்களை நம்மால் காண முடிகிறது. ஒன்று: அவர்களின் விஞ்ஞான முதிர்ச்சிக்கேற்ப அவர்களின் தாய்நாடுகள் அவர்களுக்கு மதிப்புத் தருவதில்லை. இரண்டாவது: போதுமான ஊதியமும் அவர்களுக்கு தம் நாட்டில் கிடைப்பதில்லை. ஒரு வேளை உலமாக்கள் ஊக்குவித்தால் பலன் கிட்டலாம் என்பது பாக். அதிபரின் மதிப்பீடு.

## 4. திருக்குர்ஆன் தரும் பொக்கிஷங்கள்!

''(நபியே!) அவனே இவ்வேதத்தையும் உம்மீது அருளினான்; இதில் (தெளிவாகவும்) குறிப்பாக(வும்) உள்ள அர்த்தத்தையுடைய வசனங்களும் இருக்கின்றன. இவைதாம் இவ்வேதத்தின் அடிப்படை! மற்றவை, பல பொருள்களுக்கு இடம்பாடான (உவமைப் பொருள் கொண்ட)வை. எவர்களுடைய ஹிருதயங்களில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள், அதில் குழப்பத்தை உண்டுபண்ண கருதி (இத்தகைய வசனங்களில் தவறான) பல அர்த்தங்களையே தேடி



பின்பற்றுவார்கள். ஆயினும் இதன் உண்மை கருத்தை அல்லாஹ்வையன்றி எவரும் அறியார். கல்வியறிவில் நிலை பெற்றவர்களோ (அதன் கருத்து தங்களுக்கு பூரணமாக விளங்கா விடினும்) ''இதனையும் நாங்கள் விசுவாசித்தோம்! (இவ்விரு வகை வசனங்கள்) யாவும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதாம்'' என்று கூறுவர். அறிவுடையோர்களையன்றி மற்றெவரும் (இவற்றைக்கொண்டு) நல்லுபதேசம் அடைய மாட்டார்கள். —அத்: 3, வச: 7

''நிச்சயமாக, அல்லாஹ் கல்வி ஞானத்தை ஒரேயடியாக மக்களை விட்டும் எடுத்துக் கொண்டுவிட மாட்டான். ஆனால், கல்விமான்களை கைப்பற்றுவதன் மூலம் கல்வியையும் கைப்பற்றிக் கொள்வான்."

—அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்)

திருக்குர்ஆனுடைய வசனங்களில் 'முஹ்கமாத்', 'முதஷாபிஹாத்' என்று இரு வகையுண்டு என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். 'முஹ்கமாத்' வசனங்களைப் பற்றி தெளிவான விளக்கமுள்ளது; 'முதஷாபிஹாத்' வசனங்களில் மனித மூளைக்கு அல்லாஹ் வேலை தந்துள்ளான். இவற்றின் சரியான பொருளை அல்லாஹ் ஒருவனே அறிவான். இதனையும் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். 'ராஸிகூன ஃபில் இல்ம்' என்பதற்கு 'கல்வியறிவில் நிலை பெற்றவர்கள்' என்பது பொருள். 'சிறந்த கல்விமான்கள்' என்றும் பொருள் கொள்ளலாம். இவர்களின் ஆராய்ச்சிக்கு ஏற்றவாறு திருக்குர்ஆன் வசனங்களுக்கு பொருள் வருகிறது. ஆனால், இத னைக்கொண்டு குழப்பங்கள் வந்து விடக்கூடாது. எல்லாம் வல்ல அல்லாஹ் இப்பேராபத்தை விட்டு நம்மைக் காப்பாற்றுவானாக.

"கல்வி ஞானங்கொடுக்கப் பெற்றோர்களின் இதயங்களில் (பதியத்தக்க) தெளிவான வசனங்களாக இது இருக்கிறது."

—அத்: 29, வச: 49

அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இரகசியங்களை மறைத்து வைத்துள்ளான்; பூமியிலுள்ள, வானங்களிலுள்ள பல இரகசியங்களையும் நாம் திருக்குர்ஆனை துருவிப் பார்க்கும் பொழுது நம்மால் பார்க்க முடிகிறது. கல்வி ஞானம் கொடுக்கப்பட்டவர்களின் நெஞ்சங்கள் இவற்றை நன்கு புரிந்து கொள்ள முடியும் என்று அல்லாஹ்வே இவ்வசனத்தில் கோடிட்டுக் காட்டுகிறான். எனவே, அவற்றை ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு கல்விமான்களை சார்ந்ததாகி விடுகிறது.

## திருக்குர்ஆனுக்குப் பிறகு வேறு வேத நூல் இறக்கப்படாததேன்?

தவ்ராத், ஜபூர், இஞ்சீல், குர்ஆன் ஆகிய வேதங்களை ஏறக்குறைய 500—வருட இடைவெளி விட்டு அல்லாஹ் மக்கள் நேர்வழி பெற இறக்கினான். திருக்குர்ஆனுக்குப் பிறகு 14—நூற்றாண்டுகளாகி விட்டன. அதன்பிறகு அல்லாஹ் வேறு எவ்வித வேதத்தையும் இறக்கவில்லை. ஏன் இறக்கவில்லை? அல்லாஹ் இதற்குரிய காரணத்தை திருக்குர்ஆனில், அத்தியாயம் 16, வசனம் 29—இல் பின்வருமாறு கூறுகின்றான்.

"ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விவரிக்க கூடிய இவ்வேதத்தை நாம்தாம் உம்மீது அருளியிருக்கிறோம். இது நேரான வழியாகவும், அருளாகவும் இருப்பதுடன், (எனக்கு) முற்றிலும் வழிபடுவோருக்கு ஒரு நன்மாராயமாகவும் இருக்கிறது."



ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விவரிக்க வேதநூல் திருக்குர்ஆனை அருளிவிட்ட பிறகு வேறு வேதத்தை இனி இறக்கவேண்டிய அவசியமில்லை என்று திட்டவட்டமாக அல்லாஹ் இதில் அறிவித்துவிட்டபின், உலக முடிவுவரை வரக்கூடிய எல்லா மக்களுக்கும் திருக்குர்ஆன் தான் வழிகாட்டியாகிவிட்டது. எல்லா தரப்பினருக்கும் இது வழிகாட்டும்பொழுது, விஞ்ஞானிகளுக்கும், புதிய கண்டு பிடிப்புகளை உற்பத்தி செய்கிறவர்களுக்கும் எப்படி இது வழிகாட்டாதிருக்க முடியும்?

## வானங்களிலும், பூமியிலும் உள்ள பொக்கிஷங்கள்!

அல்லாஹ்வுடைய இந்த குர்ஆனில், இப்பால் யாரேனும் மாற்றம் செய்து விடுவார்களோ? அல்லது இது அழிந்துபோய் விடுமோ? என்று எவரும் ஐயம் கொள்ள வேண்டாம் என அல்லாஹ் கீழ்வரும் வசனமும் மூலம் உறுதிமானம் தருகிறான்.

"நிச்சயமாக நாம்தாம் இவ்வேதத்தை (உலக முடிவு வரும் வரையிலான மக்களுக்காக உம்மூலம்) இறக்கி வைத்தோம். ஆகவே (இதில் எத்தகைய மாறுதலும், அழிவும் ஏற்படாதவாறு) நிச்சயமாக நாமே அதனை இரட்சித்துக் கொள்வோம்.

—அத்: 15, வச: 9

இனி, விஞ்ஞானிகளுக்கு அல்லாஹ் தன் திருக்குர்ஆனில் என்னென்ன விவரிக்கின்றான் என்பதை கவனிப்போம். விஞ்ஞானிகள் எப்பொழுதும் வானங்களிலுள்ளவற்றையும், பூமியிலுள்ளவற்றையும் பற்றியே ஆராய்ந்து கொண்டிருப்பார்கள். அத்தகைய ஆராய்ச்சிகள் ஒன்றும் தவறானதல்ல என்பதையும், அப்படி ஆராய்ந்தால்தான் அவற்றிலுள்ள

இரகசியங்கள் வெளிப்படுமென்பதையும் பின்வரும் வசனத்தில் சூசகமாக சுட்டிக் காட்டுகிறான்.

“வானங்களிலும், பூமியிலும் உள்ளவற்றை நிச்சயமாக அல்லாஹ், உங்களுக்கு வசப்படுத்தி தந்திருக்கிறான் என்பதையும், அவன் தன் அருட்கொடைகளை மறைவாகவும், வெளிப்படையாகவும் உங்கள்மீது சொரிந்திருக்கிறான் என்பதையும் நீங்கள் (ஆராய்ந்து) பார்க்கவில்லையா?”

—அத்: 31, வச: 20

## தேவைக்கேற்ற அளவு தருபவன் அல்லாஹ்!

மறைவாகவும், வெளிப்படையாகவும் அருட்கொடைகளை சொரியும் ஆற்றல் கொண்ட அல்லாஹ் அதனை எல்லா வகையான மக்களுக்கும் அள்ளிக் கொடுப்பதில் தயக்கம் காட்டுவதில்லை. விஞ்ஞானிகள் ஆராய்கிறார்களா? அவர்களுக்கும் அதிலுள்ள இரகசியங்களை வெளிப்படுத்துகிறான். ஆத்மீகத் துறையில் சம்பந்தப்பட்டவர்கள் ஆராய்கிறார்களா? அவர்களுக்கும் அதிலுள்ள இரகசியங்களை வெளிப்படுத்துகிறான். அவர்களுக்குத் தேவையானதை அவர்களுக்குக் கொடுக்கிறான்; இவர்களுக்குத் தேவையானதை இவர்களுக்குக் கொடுக்கிறான். அவனுக்கு எவர்மீதும் வஞ்சனையில்லை. ஆனால், அந்த பொக்கிஷத்தை ஒருமிக்க கொடுத்து விடுகின்றானா? அல்லது சிறுகச் சிறுக கொடுக்கின்றானா? என்ற கேள்விக்கு அவனே பதில் பின்வருமாறு கூறுகிறான்.

“ஒவ்வொரு பொருளின் பொக்கிஷங்களும் நம்மிடமே இருக்கின்றன. எனினும், அவற்றை (அந்தந்த காலத்தில் அவற்றிற்கு) குறிப்பிட்ட அளவில்தான் நாம் இறக்கி வைக்கிறோம்.”

—அத்: 15, வச: 21



தேவைக்கேற்ற அளவில் தேவையான காலங்களில் தான் அந்த பொக்கிஷங்கள் நமக்கு கிடைக்கின்றன. ஒருமிக்க ஒரு பொருள் நமக்கு கிடைத்துவிட்டால், அதற்குரிய மதிப்பு நம்மிடம் இருப்பதில்லை. நம் முயற்சிக்கேற்ப, அதிலேற்படும் சிரமத்திற்கேற்ப அது கிடைக்கும் பொழுதுதான்; அதனை மதிக்கிறோம்; பாதுகாக்கிறோம்.

தகப்பன் கஷ்டப்பட்டு செல்வம் சேகரித்தால், அதன் மதிப்பை உணர்ந்து அவன் அதனை வீண் விரையம் செய்வதில்லை; அவனுக்குப்பின் அச்செல்வத்தை அனுபவிக்க வரும் அவன் மகன் அதனை விரைவில் கரைத்து விடுவதின் காரணம், அதனைச் சேகரிக்க அவன் சிரமப்படாததே! இந்த நுட்பத்தை அல்லாஹ் நன்கு அறிந்தே வைத்துள்ளான்.

# 5. நம் முன்னோர்களும்- இன்றைய விஞ்ஞானிகளும்!

“மனு, ஜின் கூட்டத்தார்களே! நீங்கள் வானங்கள், பூமியின் எல்லையைக் கடந்து சென்றுவிட உங்களால் கூடுமாயின் அவ்வாறு சென்று விடுங்கள்! ஆயினும் (அதற்குரிய மிகப்பெரும்) ஆற்றலுடனன்றி நீங்கள் செல்ல முடியாது.”

—அத்: 55, வச: 33

“குர்ஆனுடையவர்களே! குர்ஆனை தலையணை யாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்! இரவும், பகலும் அதனை ஓதும் முறையிலே ஓதிக் கொண்டிருங்கள். அதனை பரப்புங்கள். இனிய குரலால் ஓதுங்கள்! நீங்கள் ஜெயம் பெறுவீர்கள். இதன் பலனை இம்மையி லேயே தேடாதீர்கள். ஏனெனில், மெய்யாக அதற்குரிய பெரும் பயன் மறுமையில் இருக்கிறது.”

—அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்)

இன்றைய விஞ்ஞானிகள் பல நூதனங்களைக் கண்டுபிடித்துள்ளனர்; 50 ஆண்டுகளுக்கு முன் கற்பனைகூட செய்து பார்க்க முடியாத பல விஷயங்கள், நூதன கண்டுபிடிப்புகள் இன்று மக்களிடையே சர்வ சாதாரண புழக்கத்திலிருந்து வருகின்றன. வானொலி, டெலிவிஷன், கம்ப்யூட்டர், கால்குலேட்டர், இயந்திர மனிதன் இப்படி பல நவீனங்கள், வானத்திலே பறப்பது, பல ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்திலிருப்பவர்களோடு பேசுவது, அவர்களைப் பார்ப்பது, பல நூறு கிலோ மீட்டர் தூரத்தை நொடிப்பொழுதில் கடந்து விடுவது என்பதெல்லாம் இன்று சர்வசாதாரணமாகி விட்டது. விஞ்ஞான வளர்ச்சியால், அதற்குரிய சாதனங்களும், இயந்திரங்களும் கண்டுபிடித்து அவற்றைக் கொண்டு எல்லோரும் பயன்படும் அளவிற்கு நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இத்தகைய ஆற்றலை நம் முன்னோர்கள் பெற்றிருந்தார்களா? அற்புதமான இத்தகைய சாதனைகளை அவர்கள் புரிந்துள்ளார்களா? என்ற கேள்விக்கு நம்மில் பலர் திட்டவட்டமாக 'இல்லை!' என்றே அழுத்தந் திருத் தமாக பதில் சொல்லி விடுவர். அவர்களும் இப்படிச் செய்துள்ளனர் என்று நாம் கூறினால், அவர்கள் பலமாக அதனை எதிர்ப்பர். அந்தக் காலத்தில் இத்தகைய சாதனங்கள் ஏது? நவீன கண்டுபிடிப்புகள் ஏது? அவர்கள் காலம் கட்டை மாட்டு வண்டிக் காலம்; இது ராக்கட் வேக காலம்!' என்று ஆதாரமும் கூறுவர். இவ்வளவுதான் நம் முன்னோர்களைப் பற்றிய அவர்களின் கணிப்பு; நம் முன்னோர்களைப் பற்றி இவர்கள் அறிந்து வைத்துள்ள அறிவும் அவ்வளவே!

## நம் முன்னோர்கள் செய்த சாதனைகள்!

நம் முன்னோர்கள் இக்கால அற்புதங்களைவிட பல படிகள் முன்னேறி பிரமிக்கத்தக்க விதத்தில் பல அற்



புதங்கள் செய்துள்ளனர். ஆனால், இன்றுள்ள உபகரணங்களை கொண்டல்ல; தம் ஆத்மிக சக்தியால் அவற்றை செய்துள்ளனர். அவர்களின் அத்தகைய சாதனங்களை நம் முன்னோர்கள், 'கராமத்' என பெயரிட்டிருந்தனர். ஆத்மிக வளர்ச்சியும், அதில் அல்லாஹ்வின் உதவியும் அவர்களுக்கு இருந்து வந்தது. அவற்றின் உதவியால் அவர்கள் வானத்தில் பறந்து காட்டினர்; பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர்களுக்கப்பாலுள்ள காட்சிகளை இருந்த இடத்தில் கண்டனர்; அங்கு பேசுவதைக் கேட்டனர். தண்ணீர் மீது நடந்து காட்டினர்; நதிமீது தம் வாகனங்களை ஓட்டிக் காட்டினர். வனாந்திரங்களிலிருந்த பயங்கர மிருகங்களையெல்லாம் ஓர் உத்திரவு போட்டு அடக்கினர். அவர்களின் உடலுக்கும், உடலின் உறுப்புகளுக்கும் அல்லாஹ் இவ்வளவு அற்புதமான சக்தியைக் கொடுத்திருந்தான்.

இதனை யாரும் மறுக்க முடியாது! ஏனெனில், இதற்கு பல சரித்திர ஆதாரங்களுண்டு; சாதனைப் புரிந்தவர்களின் பெயர் பட்டியலுண்டு! இவற்றை விவரிக்கவாரம்பித்தால், அதுவே ஒரு தனி நூலாகி விடும். அன்று நம் முன்னோர்கள் செய்த சாதனைகளை நம்மால் இன்று செய்துகாட்ட முடியுமா? என்றால் கண்டிப்பாக முடியும்– அந்த அளவு ஆத்மீகத் துறையில் நாம் வளர்ச்சி பெற்றிருந்தால்!

## ஆத்மீக சக்தியும்—இயந்திர சக்தியும்!

இன்று மனிதன் ஆத்மீக சக்தியை மறந்து அல்லது மறுத்து இயந்திர சக்தி மீது நம்பிக்கை வைத்து விட்டான். அதில் வெற்றி கண்டு வருகிறான். அல்லாஹ் தான் படைத்த எல்லா அடியார்கள்மீதும் கிருபை புரிகின்றான். அது அவன் அரிய குணம்! ஆத்மீக சக்தியை நம்பினவர்களுக்கு அதிலே அவர்களுக்கு வெற்றியைத் தந்துள்ளான்.

இயந்திர சக்தியை நம்பியவர்களுக்கும் அதிலேயே வெற்றியைத் தந்து வருகிறான். முந்தின வெற்றி அமரத்துவம் பெற்றது; பிந்தின வெற்றி தற்காலிகமானது. ஆத்மா அழியாதது; எனவே, அதன் சாதனைகளும் அழிவதில்லை. இயந்திரம் அழியக்கூடியது; எனவே, அதன் சாதனைகளும் அழியக் கூடியதே! நாகரீக மனிதன் இந்த உண்மையை ஏற்க மறுப்பான்; ஆனால், உண்மை என்றும் உண்மை தான்!

## மனிதன் சூரிய மண்டலத்தை எட்ட முடியுமா?

இனி திருக்குர்ஆன் ஒளியில் விஞ்ஞான வளர்ச்சியை கவனிப்போம். சமீபத்தில் மனிதன் கண்டுபிடித்த புதிய கண்டுபிடிப்புகளில் ஒன்றுதான் 'ராக்கட்' என்பது, தற்சமயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ராக்கட் மணிக்கு 25 ஆயிரம் மைல் வேகத்தில் பாய்கிறது. இதன் வேகம் மேலும் பன்மடங்காகலாம். இந்த ராக்கட்டின் உதவியால் மனிதன் சில மணி நேரங்களில் கண்டம் விட்டுக் கண்டம் பாய முடியும்! பல மண்டலங்களுக்கும் தாவ முடியும்! வான வீதியிலே வலம்வர முடியும்! விண் வெளியிலே வீடுகள் கட்டி வாழ முடியும்! அல்லாஹ் திருக்குர்ஆனில் ஏழு வானங்களை படைத்துள்ளதாக– 'ஸப்அ ஸமாவாத்' என்று–திட்டமாக கூறியுள்ளான். மனிதன் தன் இயந்திர சக்தியால் ஏழு வானங்களையும் கடந்துவிட முடியுமா? என்றால் கண்டிப்பாக முடியாது; அவன் திருவிளை யாடல்கள் எல்லாம் முதல் வானத்தோடுதான் முடிகிறது. சந்திரன், சூரியன், நட்சத்திரங்களெல்லாம் முதல் வானத்திற்குள்ளேயே அடங்கியுள்ளன. சந்திர மண்டலம் பூமிக்கு மிக அருகிலிருப்பதால் மனிதன் வெகு எளிதில் அங்கு போய்விட்டான்; செவ்வாய் மண்டலம் இதனைவிட பல



மடங்கு தூர முள்ளது; அதற்கான முயற்சியிலிறங்கியுள்ளான்; சூரிய மண்டலம் பல கோடிக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ளது. எவ்வளவு சக்திமிக்க ராக்கட்டை அவன் உபயோகப்படுத்தினாலும் அந்த தூரத்தை கடக்க பல நூறு வருடங்கள் பிரயாணப்பட வேண்டிய வரும். எனவே, அற்ப ஆயுள் கொண்ட மனிதனால் சூரிய மண்டலப் பிரயாணம் கண்டிப்பாக முடியாது. பிறகு நட்சத்திரங்கள் எண்ணிலடங்கா நிலையிலுள்ளன; அவற்றின் ஒவ்வொன்றின் பரிமாணமும், இந்த பூமியின் பரிமாணத்தைவிட பல ஆயிரம் மடங்கு உள்ளதாக ஓர் உத்தேசக் கணக்கு உள்ளது. பூமியின் குறுக்களவு எட்டாயிரம் மைல் தூரமென்றும், சுற்றளவு 25–ஆயிரம் மைல் தூரமென்றும் ஒரு கணக்கு இருக்கிறது. முதல் வானத்தின் விஸ்தீரணமும், அதிலுள்ள மண்டலங்களின் நிலையுமே இப்படியென்றால், மற்ற ஆறு வானங்களைப் பற்றியும், அவற்றிலுள்ளவற்றை பற்றியும் மனிதன் எப்படி திட்டமாக விவரித்துக் கூறிவிட முடியும்? எனவேதான் அல்லாஹ், வானங்களை கடக்க முடியாது; அப்படிக் கடக்க வேண்டி வந்தாலும் பூமியின் எல்லையைக் கடந்து முதல் வானத்திற்கு செல்லலாம்; அதற்கும் மிகப்பெரும் ஆற்றலின்றி அவ்வாறு செல்ல முடியாது என்று மேலே சுட்டிக்காட்டியுள்ள வசனத்தில் சூசகமாக கூறுகிறான். அந்த பெரும் ஆற்றலுக்கு 'ஸுல்தான்' என்று குறிப்பிடுகிறான். அந்த 'ஸுல்தான்' என்பதற்குத்தான் விஞ்ஞானிகள் 'ராக்கட்' என்று குறிப்பிடுகின்றனர்.

இந்த ராக்கட் மூலம் சந்திர மண்டலத்திற்கு செல்ல முடியுமென்பதை அல்லாஹ் திருக்குர்ஆன் மூலம் மனிதர்களுக்கு 14–நூற்றாண்டுகளுக்கு முன்பே கூறி விட்டான். அதற்கு ஆதாரமாக அத்தியாயம் – 84, வசனங்கள்–16 முதல் 20 வரை பின்வரும் ஆதாரத்தைப் பார்க்கிறோம்.

"அந்தி செவ்வானத்தின்மீது சத்தியமாக, இரவின் மீதும், அது மறைத்துக் கொண்டிருப்பதன் மீதும் சத்தியமாக பூரண சந்திரன் மீதும் சத்தியமாக (ஒரு) நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு நிச்சயமாக, நீங்கள் படிப்படியாக கடக்க வேண்டி யிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு என்ன நேர்ந்தது? (ஏன்?) அவர்கள் இதனை நம்புவதில்லை."

பூ மண்டலத்திலிருந்து சந்திர மண்டலத்திற்கு படிப் படியாக கடக்கவேண்டிய காலம் ஒன்று உண்டு என்பதை அல்லாஹ் அன்றே கூறிவிட்டான். எனவே சந்திர மண்டலத் தில் மனிதன் வாழக்கூடிய சாத்தியக் கூறுகளை நாம் உணர முடிகிறது.

## மறைத்து வைக்கப்பட்டுள்ள பொருள்கள் என்ன?

அத்தியாயம் 27, வசனம் 25–ல் வானத்திலும், பூமி யிலும் அல்லாஹ் மறைத்து வைத்துள்ள பொருள் களைப்பற்றி விவரிக்கின்றான். இந்த வசனத்தில் 'கப்' என்ற ஒரு பதம் வருகிறது. இதற்கு 'மறைத்து வைக்கப்படக் கூடிய' என்ற பொருள் வருகிறது. வானத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ள பொருள்களில் கோளங்கள், மண்டலங்கள், ஆகர்ஷண சக்திகள் போன்றவையும் அடங்கியுள்ளன. பூமி யில் மறைத்து வைக்கப்பட்டுள்ளவற்றில் நீர்வளம், எண்ணெய் வளம், தாதுப்பொருள்கள் முதலியனவும் அடங்கி விடுகின்றன. இன்றைய விஞ்ஞானிகள் வானத்திலும், பூமி யிலும் பற்பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல அதிசயமான சக்திகளையும், பொருள்களையும் கண்டுபிடித்துக் கொண்டே வருகின்றனர். இந்த ஆராய்ச்சிகளுக்கும், கண்டுபிடிக்கப்படும் புதிய பொருள்களுக்கும் ஓர் எல்லையே கிடையாது. அக்காலத்து மக்கள் வானத்தில் மறைத்து



வைக்கப்பட்டிருப்பது மழையென்றும், பூமியில் மறைத்து வைக்கப்பட்டிருப்பது விளையக்கூடிய புற்பூண்டுகள் என்றும் கூறி வந்தனர். இக்கால விஞ்ஞானிகள் வானிலும், பூமி யிலும் பல புதிய பொருள்களை கண்டுபிடித்து நமக்கு அளித்து வருகின்றனர். ஆரம்பத்தில் இவை நமக்கு வியப்பை அளிக்கின்றன. அடுத்து வேறு புதிய கண்டு பிடிப்புகள் வெளியாகும் பொழுது முந்திய நம் வியப்பு மறைந்து போய், புதிய பொருள்கள் பக்கம் உதயமாகி விடுகிறது. ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பின் பொழுதும் நாம் வியந்துகொண்டேதான் வருகிறோம். ஆனால், அல்லாஹ்வுக்கு இதில் ஒன்றும் வியப்பே இல்லை. அவன் எல்லாவற்றையும் முற்கூட்டியே அறிந்தவனாயுள்ளான். எனவே, அவன் வியக்க காரணமில்லை.

# 6. உலக அதிசயங்களுக்குத் திருக்குர்ஆனில் ஆதாரங்கள்!

"அவன்தான் இரு சமுத்திர (ஜல)ங்களையும் ஒன்று சேர்த்திருக்கிறான். ஒன்று மிக்க இன்பமும், மதுரமுமான நீர்; மற்றொன்று, உப்பும், கசப்புமான நீர்! இவ்விரண்டிற்கிடையில் (அவை) மீற முடியாத ஒரு தடையை ஏற்படுத்தியிருக் கிறான்."

–அத்: 25, வச: 53

"நான் உங்களிடம் இரண்டு பொருள்களை விட்டுச் செல்கிறேன்; அவ்விரண்டினையும் நீங்கள் பலமாக பற்றி பிடித்துக் கொள்வீர்களாயின், நீங்கள் வழி தவறிவிட மாட்டீர் கள். அவை, அல்லாஹ்வின் குர்ஆனும், என் உரையு மாகும்."–அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்–அம்)

உலகில் எத்தனையோ அதிசயமான பொருள்கள் உள்ளன; அவற்றுள் சில, பல ஆயிரக்கணக்கான வருடங்

களாய் உள்ளவை: சில அதிசயங்கள் சமீப காலத்தியவை; சில அதிசயங்கள் மனிதனால் சமைக்கப்பட்டவை; சில அதிசயங்கள் அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவை. சில முக்கியமான அதிசயங்களை அல்லாஹ் ஆங்காங்கு திருக்குர்ஆனில் சுட்டிக் காட்டியுள்ளான். அவற்றை இன்றும் நேரடியாகக் காணலாம்.

## இருவகையான நீரின் மாறுபட்ட ருசி!

உதாரணமாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தில், இரு சமுத்திர நீர்களைப் பற்றி அல்லாஹ் குறிப்பிட்டு, அதன் ருசியையும் அடையாளம் காட்டுகிறான். இந்த அதிசய நீர்நிலைகள் எங்குள்ளன? என்பதை இன்றைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இப்படி இரு வகையான ருசிகள் கொண்ட இரு நதிகள் ஒன்றாய் இணைத்து பல நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் தூரம்வரை ஓடிக் கொண்டிருக்கின்றன. பங்களாதேஷிலுள்ள சிட்டகாங் நகரிலிருந்து பர்மாவிலுள்ள அரக்கான் நகர்வரை இவற்றின் ஒட்டம் உள்ளது. இந்த இரு நதிகளின் நீரும் இணையும் பகுதியில் ஒரு நீண்ட கோடு தெரிகிறது. ஒரு பகுதியின் நீர் இனிக்கிறது; மற்றொரு பகுதியின் நீர் உவர்க்கிறது.

இதேபோன்று நீர் சம்பந்தப்பட்ட மற்றொரு நிகழ்ச்சியையும் அல்லாஹ் திருக்குர்ஆனில் அத்தியாயம் 55, வசனம் 19–யில் இரு நதிகள் ஒன்றிணைந்து செல் வதைக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறான்.

“ஒன்று சேரும் இரு நீர்ப் பரப்புகளையும் அவனே சந்திக்கச் செய்தான். ஆயினும், அவற்றிற்கிடையே ஒரு தடுப்புண்டு. (அத்தடுப்பை) அவ்விரண்டும் மீறாது.”



இது எப்படி சாத்தியமாகும்? என்று சிலர் அதிசயப்படலாம். ஆனால், அல்லாஹ்வின் ஆற்றலில் இது ஒன்றும் பிரமாதமாயில்லை என்பதற்குப் பின்காணும் குறிப்பு போதுமானதாகும்.

உ.பி. மாநிலத்தைச் சார்ந்த அலஹாபாதில் கங்கை நதியும், ஜமுனா (யமுனை) நதியும் இணைந்து ஓடுகின்றன. பல நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் தூரம் வரை இந்த ஓட்டம் இருந்து வருகிறது. கங்கை நதியின் நீரின் நிறம் ஊதாவாக இருக்கிறது; ஜமுனா நதியின் நீரின் நிறம் வெள்ளையாக இருக்கிறது. இந்த இரு நீரும் இணையும் பகுதி ஒரு வகை ஜொலிப்புடைய கீறலாக காட்சியளிக்கிறது.

அல்லாஹ் குறிப்பிட்ட இந்த இரு உதாரணங்கள் கொண்ட நீர்நிலைகள் இவையாகவே இருக்கலாம். அல்லது உலகின் வேறு பகுதியிலும் இப்படியிருக்கலாம். ஆக, திருக்குர்ஆனில் அல்லாஹ் குறிப்பிட்ட அடையாளங்களுக்கு நமக்கு ஆதாரங்கள் இன்றும் கிடைக்கின்றன என்பது மட்டும் உண்மை.

## ஆதாரமுள்ள மார்க்கம்!

திருக்குர்ஆனைப்போல இப்படி தக்க ஆதாரங்களை காட்டக்கூடிய வேறு வேத நூற்கள், புராணங்கள், இதிகாசங்கள், கிரந்தங்கள் எதிலும் உண்டா? என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் கூற முடியும். ஏனெனில், திருக்குர்ஆன் அருளப்பட்டதற்கு சரியான ஆதாரங்கள், அடையாளங்கள் இன்றளவும் உள்ளன. அதற்குரிய சரித்திரம் இருக்கிறது; சான்றுகள் உள்ளன; காலங்கள், நேரங்கள் கணிக்கப்பட்டுள்ளன. திருக்குர்ஆனின் எந்த வசனம்

இடத்தில் அருளப்பட்டது என்பதற்கு 14-நூற்றாண்டு களாகியும் இன்றளவும் அதன் அடையாளங்களைக் காண முடிகிறது. சம்பவங்கள் நடந்த இடங்களை யுத்தங்கள் நிகழ்ந்த தளங்களை இன்றும் பார்க்க முடிகிறது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்கள் பிறந்த இடம் திரு மக்கா நகரிலும், அடக்கமான இடம் திருமதீனா நகரிலும் உள்ள இடங்கள் இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அண்ணலாரின் தோழர்கள் வாழ்ந்துவந்த இடங்களையும், அடக்கமாகியுள்ள இடங்களையும் இன்றும் பார்க்கலாம்.

அதே நேரத்தில் மற்ற ஸ்தாபகர்கள் அல்லது மற்ற மதத்தினர் நம்பும் புனிதப் புருடர்கள் பிறந்த, இறந்த இடங் களைப் பற்றி திட்டவட்டமாக ஆதாரத்துடன் கூறு முடிய வில்லை.

உதாரணமாக, தசரத மன்னருடைய மைந்தர் இராமர் பிறந்த இடம், இறந்த இடம் எதுவென்று திட்ட வட்டமாகக் கூறமுடியவில்லை. சிலர் இராமர் பிறந்த இடம் தமிழ்நாடுதான் என்று கூறுகின்றனர்; சிலர் வட நாட்டிலுள்ள அயோத்தி என்கின்றனர்; அஜூதியாவிலுள்ள ஓர் இடத்தில் மொகலாய மன்னர் பாபர் காலத்தில் கட்டப்பட்ட பாபரீ மஸ்ஜித் இருந்த இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்று கூறுகின்றனர். ஹிந்து மதம் மிகப் பழமையானது; எனவே, அதற்கு சரியான சரித்திர ஆதாரங்கள் இல்லை.

இந்து மதம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது? அதன் ஸ்தாபகர் யார்? அதன் கொள்கை என்ன? அடிப்படை இலட்சியம் என்ன என்ற விவரம் அந்த மதத்தைச் சார்ந்த வர்களுக்கே சரியாகத் தெரியவில்லை.



## இஸ்லாத்தில் சர்ச்சைக்கு இடமில்லை!

ஆனால், இஸ்லாம் மார்க்கம் இத்தகைய நிலையி லில்லை; இது ஆரம்பமான காலம், இதன் ஸ்தாபகர், இதன் கொள்கைகள், அடிப்படை இலட்சியங்கள் எல்லாமே துல்லியமான ஆதாரத்துடன் விளங்கி வருவதால் அது வளர்ந்துகொண்டே வருகிறது. இன்று அந்த மார்க்கத்தைச் சார்ந்தவர்களின் மொத்த எண்ணிக்கை உலகில் இருநூறு கோடியையும் தாண்டிவிட்டது.

சர்ச்சைக்குரிய, சந்தேகத்துக்குரிய எந்த உதாரணத் தையும் இஸ்லாம் ஏற்றுக்கொள்வதில்லை. தப்பான சரித்திரத்தை அது அங்கீகரிப்பதில்லை. கற்பனைகளையும், இட்டுக் கட்டுகளையும் அது புறக்கணித்து வருவதால்தான் இன்றளவும் அது படராதிருந்து வருகிறது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்களின் வரலாற்றை ஐந்து இலட்சம் பேர் ஆராய்ந்திருப்பதாக ஜெர்மானிய அறிஞர் டாக்டர் ஸ்பிரிஞ்சர் கூறியுள்ளார். இஸ்லாம் மார்க்கத்தை ஸ்தாபித்த வரைப் பற்றியே இத்தகைய ஒரு நற்சான்றிதழ் என்றால், அந்த மார்க்கமும், திருக்குர்ஆனும் எவ்வளவு களங்கமற்ற தாக இருக்க முடியுமென்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## சந்திரன் பிளந்ததற்குரிய ஆதாரம்!

ஒரு சமயம் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்களின் நபித்துவத்தை கேலிசெய்து கொண்டும், இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி அவதூறுபடுத்திக் கொண்டும் அபூஜஹல் என்பான் மக்களை வழிகெடுத்து வந்தான். உண்மையான இறைத்தூதராக இருந்தால் எல்லோரும்

பார்க்கிறமாதிரி ஓர் அற்புதத்தை செய்து காட்டட்டும் என்று சவால் விட்டான். அல்லாஹ் அவனின் சவாலை ஏற்று அவனுக்கு சரியான வாயாப்புக் கொடுக்க அண்ணலாரைக் கொண்டு சந்திரனைப் பிளக்க வைத்தான். இந்த வரலாற்றுச் சம்பவத்தை அல்லாஹ் திருக்குர்ஆனில் அத்: 54, வச: 1,2– இல் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

“மறுமை நெருங்கிவிட்டது; (அதற்கு அறிகுறியாக) சந்திரனும் பிளந்து விட்டது. எனினும், அவர்கள் எந்த அத்தாட்சியைக் கண்டபோதிலும் (அதனைப்) புறக்கணித்து, ‘இது தொடர்ந்த சூனியந்தான்’ என்று கூறுகின்றனர்.”

சந்திரன் பிளந்ததை அச்சமயம் அபூஜஹல் மட்டும் பார்க்கவில்லை; அவனைச் சார்ந்தோரும் பார்த்தனர். அண்ணலாரைச் சார்ந்தவர்களும் பார்த்தனர். அக்காலத்து மலையாளத்து மன்னர் சேரமான் பெருமாளும் கள்ளிக் கோட்டையில் பார்த்து தம் நாட்குறிப்பில் இதனைக் குறித்துக் குறிப்பு எழுதி வைத்துள்ளார். அண்மையில் சந்திரமண்டலத்தில் இறங்கிய விஞ்ஞானிகளும் ஒரு நீண்ட வெடிப்புக்கோட்டை நேரில் பார்த்துள்ளனர். இன்னும் வேறென்ன சான்றுகள் வேண்டும்?

## பிர்அவ்னுடைய சடலத்திற்கு ஆதாரம்!

நபி மூஸா (அலை) அவர்கள் காலத்து பிர்அவ்னுடைய வரலாற்றை அல்லாஹ் திருக்குர்ஆனில் அத்தியாயம்: 10, வசனங்கள் 75 முதல் 93வரை விவரிக்கிறான். பிர்அவ்ன் செய்த அட்டூழியங்கள், நபி மூஸா (அலை) அவர்களுக்கு விரோதமாக செய்த கொடுமைகள், இறுதியில் நைல் நதியில் அவனும், அவனின் சைன்யங்களும் மூழ்கடிக்கப்பட்ட விஷயங்களையும் விவரித்து, அதே வசனத் தொடரில் 92–ம் வசனத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்.



“எனினும், உனக்கு பின்னுள்ளவர்களுக்கு ஓர் அத்தாட்சியாவதற்காக உன்னுடைய தேகத்தை (அது அழியாமல்) நாம் இன்றைய தினம் பாதுகாத்துக் கொள்வோம்.” (என்று கூறினோம்.) எனினும், நிச்சயமாக மனிதர்களில் அநேகர், நம்முடைய (இத்தகைய) சான்றுகளைப் பற்றியும் பராமுகமாயிருக்கின்றனர்.”

அல்லாஹ் குறிப்பிட்ட இந்த சான்றான பிர்அவ்னுடைய சடலம் எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவிலுள்ள அருங்காட்சியகத்தில் (மியூஸியம்) ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் பத்திரமாக பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. கறுத்து சுருங்கிப்போன நிலையில் இன்றும் அவன் சடலத்தை அங்கு கண்கூடாகப் பார்க்கலாம்.

## குகைத் தோழர்களின் ஆதாரம்!

இதேபோன்று ‘அஸ்ஹாபுல் கஹ்ப்’–‘குகைத் தோழர்’களைப் பற்றி அல்லாஹ் அத்தியாயம்: 18, வசனங்கள்: 9 முதல் 26வரை விவரித்துள்ளான். 9–ஆம் வசனத்தில் அல்லாஹ் குறிப்பிடுவதாவது:

“(நபியே! ‘அஸ்ஹாபுல் கஹ்ப்’ என்னும் குகையுடையவர்களைப்பற்றி யூதர்களும் உம்மிடம் கேட்கின்றனர்.) அந்த குகையுடையவர்களும், சாஸனத்தையுடையவர்களும் நிச்சயமாக நம்முடைய அத்தாட்சிகளில் ஆச்சரியமானவர்களாக இருந்தனர் என்று எண்ணுகிறீரோ (அவர்களின் சரித்திரத்தைக் கூறுகிறோம்.)

இவ்வாறு ஆரம்பித்து மிக இரத்தினச் சுருக்கமாக 17 வசனங்களில் ஒரு நீண்ட வரலாற்றை சுருக்கிக் கூறுகிறான். ஆராய்ச்சியாளர்கள், சிரியா நாட்டு பகுதியிலுள்ள மலைப் பிரதேசங்களில் இந்தக் குகையை கண்டுபிடித்து, சிறிது

தூரம் உள்ளே சென்றவர்கள், திகிலடைந்து வெளியே ஓடிவந்து விட்டுள்ளனர். இதையும் ஓர் அழகான அத்தாட்சியாகவே எடுத்துக் கொள்வோமாக!

## 7. அணுகுண்டு பற்றி திருக்குர்ஆன் தரும் தகவல்கள்!

"நீர் காணும் மலைகளை, அவை வெகு உறுதியாக இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்! அவை மேகத்தைப் போல பறந்தோடும்; ஒவ்வொரு பொருளையும் (படைத்து) உறுதியாக ஒழுங்குபடுத்திய அல்லாஹ்வுடைய கலைத்திறனால் (அவை நடைபெறும்.) நிச்சயமாக அவன், நீங்கள் செய்து கொண்டிருக்கும் யாவற்றையும் நன்கு அறிந்தவனாகவே இருக்கிறான்."

—அத்: 27, வச: 88

"திருக்குர்ஆனை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்; எவன் வசத்தில் என் உயிர் இருக்கிறதோ, அவன்மீது ஆணையாக, ஒட்டகமானது தன் பிடி கயிற்றோடு ஓடி விடுவதைப்போல, திருக்குர்ஆன் நெஞ்சங்களை விட்டு வெளியேறிவிடக்கூடியதாயிருக்கிறது."

—அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்–அம்)

1945–ல் அமெரிக்கா, ஜப்பானைச் சார்ந்த ஹிரோஷிமா, நாகஸாகி ஆகிய இரு நகரங்கள் மீது இரு அணுகுண்டுகளை வீசியது. அதன் காரணமாக அந்த இரு நகரங்களில் வாழ்ந்து கொண்டிருந்த இலட்சக்கணக்கான மக்களும், அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த பிரமாண்டமான கட்டிடங்களும் பஞ்சுபோல வானத்தில் பறந்தனர். அணுகுண்டுகள் விழுந்த இரண்டு இடங்களிலும் பயங்கரமான மாபெரும் இரு பள்ளங்கள் காணப்பட்டன. பூமியில் துளை விழுந்து விட்டதோ என்று அஞ்சக்கூடிய அளவில் அவை இருந்தன. அணு



குண்டை அமெரிக்கா ஜப்பானில் வீசி இரண்டாம் மகாயுத்தத்திற்கே சமாதி கட்டிவிட்டது.

அணுகுண்டு தாக்குதலினால் ஏராளமான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதோடு நில்லாது, அந்த இரு நகரங்களின் சுற்றுப்புறங்களில் வாழ்ந்துவந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் அணுகுண்டுகளின் கதிர் வீச்சால் தாக்கப்பட்டு அங்கஹீனங்களுக்கு ஆளாயினர். அவர்களின் உடல்களின் அமைப்புகளும், முகங்களின் தோற்றங்களும்கூட அவலட்சணமாக மாறிவிட்டன. கர்ப்பத்திலிருந்த சிசுக்களின் தோற்றங்கள்கூட கோணல் மாணலாகிவிட்டன.

## அடுத்த போரில் உலகம் அழியும்!

அணுகுண்டால் ஏற்பட்ட பயங்கர விளைவைக் கண்ட உலகின் எல்லா நாடுகளும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாயின. இனிமேல் எந்த நாடும் அணுகுண்டுகளை தயாரிக்கவோ, அதனை உபயோகப்படுத்தவோ கூடாதெனக் கண்டித்தன. அப்படியிருந்தும், இன்று அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகள் அணுகுண்டுகளை தயாரித்து எந்த சமயத்திலும் அவற்றை பிரயோகித்துவிடும் ஆயத்த நிலையிலுள்ளன. இனி அணுகுண்டு யுத்தம் மூண்டால் உலகமே அழிந்து விடும் என்று எல்லோரும் ஒருமித்து அபிப்பிராயம் கூறுகின்றனர்.

ஒருசில நாடுகள் அணுகுண்டுகளை தயாரித்து அவை விஞ்ஞான வளர்ச்சிக்குத்தான் பயன்படுத்தப்படும் என்று கூறுகின்றன. வல்லரசு நாடுகள் அவ்வப்பொழுது மனித சஞ்சாரமற்ற பிரதேசங்களில் அவற்றை பிரயோகித்து, அதன் விளைவுகளை ஆராய்ந்த வண்ணமாயுள்ளன. ஆக, சிறிய, பெரிய எல்லா நாடுகளும் அணுகுண்டு ஆயுதத்தை

தயாரித்து விட்டன என்பது நிரூபணமாகிவிட்டது. ஓர் ஆயுதத்தை ஒருவன் தயாரித்துக் கொண்டால், அதனை சமயம் நேரும்பொழுது உபயோகிக்காமல் இருக்கமாட்டான். இனி மனித இயல்பு. எனவேதான், இனியொரு மகாயுத்தம் மூண்டால் ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது அணுகுண்டு வீசத்தான் செய்யும். அப்பொழுது எல்லா நாடுகளும் அணுகுண்டு களின் தாக்குதலுக்கு இரையாகி அழியும். அப்பொழுது உலகமே அழிந்து போகக்கூடிய வாய்ப்பும் வந்துவிடும்.

## மலைகள் பஞ்சாகப் பறக்கும் மறுமை நாள்!

மனிதன் கண்டுபிடிக்கும் அணுகுண்டுகளைப் பற்றியும், அவற்றின் விளைவுகளைப் பற்றியும் அல்லாஹ் தன் மொழியில் 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே திருக் குர்ஆனில் சுட்டிக்காட்டி விட்டான். 'ஜர்ர' என்ற பதத்தை அல்லாஹ் பல இடங்களில் உபயோகித்துள்ளான். 'ஜர்ர' என்றால் 'அணு' என்று பொருள். மறுமை நாளன்று எக்காளம் ஊதப்படும்; மலைகளெல்லாம் பஞ்சு போல மறக்கும். மலைகளின் நிலையே இப்படியென்றால், மனிதன், மரம், செடி, கொடி, கூட கோபுரங்கள், மாட மாளிகைகள், மச்சு வீடுகள், குச்சு வீடுகள், கால்நடைகள், ஊர்வன—பறப்பன எல்லாவற்றின் கதி என்னவாகும்? இது எப்படி சாத்தியமாகும்? என்ற சந்தேகிப்பவர்களுக்கு மனிதனே செய்த அணுகுண்டு, ஹிரோஷிமாவையும், நாகஸாகியையும் என்ன செய்தது? அவற்றிலிருந்த அசையும் பொருள்களும், அசையாப் பொருள்களும் என்னவாயின? மனித வர்க்கத்தின் நிலை என்னாயிற்று? என்பதைச் சற்று நோட்டமிட வேண்டும். மனிதன் செய்த அணுகுண்டிற்கே இவ்வளவு சக்தி என்றால்,



அந்த மனிதனைப் படைத்த அல்லாஹ்வின் எக்காள சப்தத்திற்கு எவ்வளவு பெரிய சக்தி இருக்க வேண்டும்?

## திருக்குர்ஆன் தரும் எச்சரிக்கைகள்!

அல்லாஹ்வுடைய எக்காள சப்தம் எப்படியிருக்கும்? அல்லாஹ் திருக்குர்ஆனில், அத்தியாயம்: 36, வசனம்—49, 50—ல் பின்வருமாறு விவரிக்கின்றான்.

"ஒரே ஒரு சப்தத்தை தவிர (வேறு எதற்காகவும்) அவர்கள் காத்திருக்கவில்லை. அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்கும்பொழுது (அது) அவர்களை பிடித்துக் கொள்ளும். அப்போது, அவர்கள் மரண சாஸனம் கூறவோ அல்லது தங்கள் குடும்பத்தாரிடம் செல்லவோ முடியாமலாகி விடும். (அதற்குள் அவர்கள் அழிந்து விடு வார்கள்.)

இதற்கொரு முன்னுதாரணத்தைதான் உலக மக்கள் ஹிரோஷிமாவிலும், நாகஸாகியிலும் கண்டனர். இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் அணுகுண்டு கண்டுபிடிக் கப்பட்டது. ஆனால், 1400 ஆண்டுகளுக்கு முன்னரே அல்லாஹ் இதன் விளக்கம் கொடுத்து விட்டான் என்ப தற்கு பல வசனங்கள் முன்னுதாரணங்களாயுள்ளன. மக்கள் தங்களுக்குள் சதி செய்து கொண்டும். சச்சரவு செய்து கொண்டும் எப்படி அழிந்துபோகவுள்ளனர் என்பதற்கு கீழ்வரும் வசனங்கள் போதிய சான்று பகர்ந்து கொண்டி ருக்கின்றன.

"தீங்கிழைக்கச் சூழ்ச்சிகள் செய்யும் இவர்களைப் பூமி விழுங்கும்படி அல்லாஹ் செய்ய மாட்டான் என்றோ அல்லது இவர்கள் அறிந்து கொள்ளாத விதத்தில் இவர்களை வேதனை வந்தடையாதென்றோ இவர்கள் அச்சமற்றிருக் கின்றனரா?"

—அத்: 16, வச: 45

“எனினும், அவர்கள் தங்கள் சூழ்ச்சிகளை செய்து கொண்டிருந்தனர்; அவர்களுடைய சூழ்ச்சிகளோ, மலைகளையும் பெயர்த்துவிடக்கூடியனவாக இருந்தபோதிலும் அல்லாஹ்வு(டைய ஞானத்து)க்குட்பட்டே இருந்தன.”

–அத்: 14, வச: 46

“இவர்களைவிட மிக்க பலசாலிகளாக இருந்த எத்தனையோ கூட்டத்தாரை இவர்களுக்கு முன்னர் நாம் அழித்திருக்கிறோம். அவர்கள் (தப்பித்துக்கொள்ள பாதுகாப்பான இடத்தை) நாடெல்லாம் தேடியலைந்தார்கள். (ஆயினும்) அவர்களுக்கு புகலிடம் இருந்ததா? எவருக்கு(ப் பரிசுத்தமான) ஹிருதயமிருந்து ஓர்மைப்பாடான மனத்துடன் செவி சாய்க்கின்றனரோ, அவர்களுக்கு நிச்சயமாக இதில் (நல்ல) படிப்பினை இருக்கிறது.”

–அத்: 50, வச: 36, 37

“தெளிவானதொரு புகை வானத்திலிருந்து வரும் நாளை, நீர் எதிர்பார்த்திடும்! மனிதர்களை அது சூழ்ந்து கொள்ளும். அது துன்புறுத்தும் வேதனையாகும்.”

–அத்: 44, வச: 10, 11

“எக்காளம் ஊதப்பட்டு குற்றவாளிகளை நாம் ஒன்று சேர்க்கும் நாளில் அவர்களுடைய கண்கள் நீலநிறம் கொண்டதாயிருக்கும். –அத்: 20, வச: 102

## முக்காலத்திற்கும் பயன்படும் வசனங்கள்!

அல்லாஹ் அருளியுள்ள திருக்குர்ஆனில் மேலெழுந்தவாரியாக பார்க்கும்பொழுது, அதன் பொருள் கடந்த காலத்தையும், கடந்தகால மக்களையும் விமர்சிப்பது போலிருக்கும். ஆனால், கூர்ந்து ஆராய்ந்தால் அது முக்காலத்தையும், முக்கால மக்களையும் விமர்சிப்பதை உணரலாம். இறந்த



காலம், நிகழ் காலம், வருங்காலம் ஆகிய முக்காலத்திற்கும் ஏற்புடையதாக அதன் விளக்கங்கள் இருப்பதையும் நன்கறியலாம். கடந்தகால சம்பவங்களைச் சுட்டிக்காட்டி, நிகழ்கால மக்களுக்கு படிப்பினையளித்து, வருங்கால மக்களை எச்சரிக்கும் முறையில் அதன் வசனங்கள் அமைந்திருப்பதே அதன் தனிச்சிறப்பை காட்டுகிறது. ஒரே நிகழ்ச்சி இறந்த காலத்திலும் நடந்திருக்கிறது; நிகழ்காலத்திலும் நடந்து கொண்டிருக்கிறது; வருங்காலத்திலும் நடக்கப் போகிறது. நிகழ்ச்சி வெளிப்பார்வைக்கு வெவ்வேறாக தெரிந்தாலும் அடிப்படையில் ஒரே குறிக்கோளைக் கொண்டதாகவே இருக்கும். சற்று கூர்ந்து கணித்தோமேயானால் இந்த உண்மையை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

அணுகுண்டைப் பற்றியும், அதனை உற்பத்தி செய்பவர்கள் தங்களுக்குள் இட்டுக்கொள்ளும் சண்டைச் சச்சரவுகளைப் பற்றியும், ஒருவரையொருவர் அழித்துக் கொள்ளச் செய்யும் சதிகளைப் பற்றியும், அணுகுண்டின் விளைவுகளைப் பற்றியும் அல்லாஹ் குறிப்பிட்டுவிட்டு, ஆரம்பத்தில் அணுகுண்டைத் தயாரிக்கும் குற்றவாளிகளின் கண்கள் நீலநிறம் கொண்டதாயிருக்கும் என்று அடையாளம் காட்டிவிட்டான். அவர்கள் மலையைப் பெயர்த்துவிடக்கூடிய ஆற்றல் பெற்றிருப்பர் என்பதையும், அணுகுண்டைக் கொண்டோ, விஷப் புகையைக் கொண்டோ அவர்கள் மக்களை அழிக்க முடியும். ஆனால், இவர்களைவிட மிக பலசாலி களையும் அல்லாஹ் அழித்து விட்டதாக ஞாபகமூட்டி, இவர்களுடைய அறிவைவிட அல்லாஹ்வின் அறிவு மிகைத்துவிடக் கூடியது என்பதையும் அல்லாஹ் சுட்டிக்காட்டியுள்ளதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கள்ளம் கபடமற்ற ஹிருதயமுள்ளவர்களுக்கு இவற்றைக்கொண்டு நல்ல படிப்பினை உண்டு என்பதையும் அல்லாஹ் அறிவித்து விட்டான்.

## அடியோடு அழிக்கப்பட்ட தீவின் அந்தரங்க நிலை!

பிரான்ஸ் நாட்டில் ஒரு தீவு இருந்தது. மேல்நாட்டின ருக்கு ஓர் உல்லாசபுரியாக இருந்த அந்த தீவு அண் மையில் கடல் கொந்தளிப்பில் சிக்கி அடியோடு அழிந்து விட்டது. அதிலிருந்த மக்கள், அழகுமிக்க கட்டிடங்கள், நவீன சாதனங்கள், விலையுயர்ந்த பொருட்கள் யாவுமே அடையாளந்தெரியாது கடலில் அமிழ்ந்து போய் விட்டன. 'ஆயிரக்கணக்கான மக்கள் அநியாயமாக, பரிதாப நிலையில் அழிந்துவிட்டனரே!' என்ற உலக மக்கள் அனைவருமே அனுதாபப்பட்டனர். ஆனால், அந்தத் தீவில் என்ன நடந்து வந்தது? என்பதை அறிந்து கொள்வீர்களேயானால் அல்லாஹ் அத்தீவிலிருந்தவர்களை அழித்தது எவ்வளவு நீதமானது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

அத்தீவில் மேல்நாடுகளின் பல பகுதிகளிலிருந்து உல்லாசப் பிரியர்கள் வருவார்கள். தீவில் நுழையுமுன் ஆடை களை கழற்றி பிறந்த மேனியாகிவிட வேண்டுமென்பது தீவு நிர்வாகிகளின் நிபந்தனை. ஆணோ, பெண்ணோ எவ்வித வேற்றுமையின்றி சரச சல்லாபத்தில் மூழ்கிக்கொள்ளலாம். மறுப்பவர்கள் உடனே தீவை விட்டு வெளியேற்றப்பட்டு விடுவார்கள். எல்லாவகையான உயர்ந்த மதுபானங்கள் இலவசமாக வினியோகிக்கப்பட்டது. எவ்வித கூச்சமுமின்றி திறந்தவெளியில் கலவி புரிந்துகொள்ள அனுமதியுண்டு. அல்லாஹ் அத்தீவை அடியோடு நிர்மூலமாக்கிவிட்டது எப்படித் தவறாகும்?



# 8. பூமியின் அமைப்பைப் பற்றித் திருக்குர்ஆன்!

"ஒன்றாகச் சேர்ந்திருந்த வானங்களையும், பூமியையும் நாமே பிரித்தமைத்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன் றையும் நீரிலிருந்து படைத்தோம் என்பதையும் இந்த நிராகரிப்போர் கவனிக்க வேண்டாமா? (இதனை) அவர்கள் நம்பமாட்டார்களா? பூமி, மனிதர்களுடன் சாய்ந்துவிடாதிருக்கும் பொருட்டு, அதில் மலைகளை நாம்தான் நாட்டினோம். அவர்கள் (விரும்பிய இடத்திற்கு) செல்லும் பொருட்டு, அதில் விசாலமான வழிகளையும் நாம் ஏற்படுத்தினோம். வானத்தை பத்திர மான ஒரு விதானத்தைப்போலவும் நாம் அமைத்தோம். (இவ்வாறெல்லாமிருந்தும்) அவற்றிலுள்ள அத்தாட்சிகளையும் அவர்கள் புறக்கணிக்கின்றனர். அவனே இரவையும், பகலையும் (உண்டாக்கினான்). சூரியனையும், சந்திரனையும் சிருஷ்டித்தான். இவை வானத்தில் (தங்களுடைய வட்ட வரைக்குள்) நீந்திச் செல்கின்றன."—அத்: 21, வச: 30,31,32,33

"திருக்குர்ஆனைக் கற்று அதனை ஓதுங்கள். ஏனெ னில், அதனைக் கற்று ஓதி, அதற்கிணங்க நடக்கக் கூடியவருக்கு, அது, எங்கும் நறுமணத்தைப் பரப்பி வீசக்கூடிய கஸ்தூரி நிறைந்த ஒரு பை போன்றதாகும். இனி, எவர் அதனைக் கற்று, அது அவர் இதயத்தில் இருக்க, அதற்கிணங்க நடக்காத அவருக்கு அது, வாய் மூடப்பட்ட கஸ்தூரி (நிறைந்த) ஒரு பை போன்றதாகும்.

—அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்)

அல்லாஹ் அருளிய மேற்காணும் வசனங்களிலிருந்து பூமியின் உற்பத்தியையும், அதன் அமைப்பையும் நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது. ஆரம்பத்தில் பூமி சூரியனோடு

ஒன்றித்திருந்திருக்கிறது. அதிலிருந்து அல்லாஹ் பூமியை பிரித்து தனி மண்டலமாக்கி, சூரியனைச் சுற்றவைத்து விட்டான். அவ்வாறு அது சுற்றும் பொழுது சூரியன் பக்க முள்ள பகுதி வெளிச்சமாக—பகலாக இருக்கிறது. பின்புற முள்ள பகுதி இருட்டாக—இரவாக இருக்கிறது. பூமியிலிருந்து தண்ணீரை வெளிப்படுத்தி உயிருள்ள படைப்பினங்களுக்கு உணவு கிடைக்கச் செய்தான். சூரியன், சந்திரன், பூமி இவையெல்லாம் தத்தம் வட்டவரைக்குள் சுற்றவும், நீந்தவும் செய்கின்றன என்பது மேற்காணும் வசனங்களின் கருத் தாகும்.

"அவன் வானங்களையும், பூமியையும் தக்க முகாந் திரங்களுடன் சிருஷ்டித்திருக்கிறான். அவனே இரவை சுருட்டி பகலை (விரிக்கிறான்.) சூரியனையும், சந்திர னையும் தனக்குள் அடக்கி வைத்திருக்கிறான். இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட கால பிரகாரம் நடக்கின்றது."

—அத்: 39, வச: 5

திருக்குர்ஆன் கூறிய இக்கருத்துகளை 14—நூற் றாண்டுகளுக்குப்பின் இன்று விஞ்ஞானிகள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டனர்.

## கொலம்பஸுக்கு உதவியது ஒரு முஸ்லிமே!

சில நூற்றாண்டுகளுக்கு முன்வரை, பூமி தட்டை யானது என்றே முஸ்லிமல்லாத மக்கள்—மேல்நாட்டினர் உட்பட பலர் நம்பி வந்தனர். பிரிட்டனைச் சார்ந்த கொலம்பஸ் என்ற ஆராய்ச்சியாளன் மட்டும் 'பூமி உருண்டை வடிவமுள்ளது' என்று வாதாடி வந்தான். அவனுடைய கூற்றை யாரும் நம்பாது அவனை 'பைத்தியக்காரன்' என்று ஏசிப்பேசி



வந்தனர். எனினும், கொலம்பஸ் மனத்தளர்ச்சியடையாது பூமி உருண்டைதான் என்று நிரூபிப்பதில் தன் முழு கவனத்தை யும் செலுத்தி தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வந்தான். கடைசியாக ஒரு கப்பலைக்கட்டி, கடலின் அக்கரையைக் கண்டு பிடித்துவிட முயன்றான். அப்பொழுதும் அவன் நண்பர் கள் அவனை கேலி செய்தனர். பூமி தட்டையான துதானென்றும், கடலில் அவன் சென்றால் சிறிது தூரம் சென்றபின் கப்பலோடு கீழே விழுந்து நாசமாகி விடுவான் என்றும் பயமுறுத்தினர். கொலம்பஸ் தைரியத்தை கைவிடாது கடலில் பிரயாணப்பட்டு அதன் அக்கரையை அடைந்தான். அச்சமயம் கொலம்பஸ் ஏறியிருந்த அந்தக் கப்பலில் ஒரு முஸ்லிம் மாலுமி இருந்தார். அவர்தாம் அமெரிக்கத் தீவைக் கண்டு பிடிக்க கொலம்பஸுக்கு உதவினார் என்றும் ஒரு குறிப்பு காணப்படுகிறது. அவன் அங்கு எந்த இடத்தில் முதலாவதாக காலடி எடுத்து வைத்தானோ, அந்த இடத் திற்கு கொலம்பஸ் ஞாபகார்த்தமாக 'கொலம்பியா' என்ற பெயர் சூட்டப்பட்டது. இது, இன்று அமெரிக்காவின் பெரிய நகரங்களில் ஒன்றாக இருக்கிறது. அத்தோடு அமெரிக் காவைக் கண்டுபிடித்த பெருமையும் அந்த கொலம்பஸையே சாருகிறது.

## பூமியின் நிலைபற்றி திருக்குர்ஆன்!

"நாம் பூமியை விரிவுபடுத்தி, அதில் அசையாது மலை களை நாட்டினோம். ஒவ்வொரு புற்பூண்டையும் (அதற்குரிய) ஒழுங்கான முறையில் அதில் நாம் முளைப்பித்தோம்."

—அத்: 15, வச: 19

"இதற்குப் பின்னர், அவனே பூமியை விரித்தான். அவனே அதிலிருந்து நீரையும், மேய்ச்சலையும் வெளியாக்கு கிறான்; மலைகளையும் அவனே அதில் நிலை நாட்டினான்."

—அத்: 79, வச: 30, 31, 32

“நீர் கூறும்: (இவ்வளவு பெரிய) பூமியை இரண்டே நாட்களில் படைத்தவனை நீங்கள் நிராகரித்துவிட்டு, (மற்றவற்றை) அவனுக்கு இணையாக்குகின்றீர்களா? அவன்தான் (சகல) உலகங்களையும் படைத்து போஷிப்பவன். அவனே அதன்மீது உயரமான மலைகளை அமைத்து, அதன்மீது (சகலவிதமான) பாக்கியங்களையும் புரிந்தான். அன்றி அதில் (வசிப்போருக்கு வேண்டிய) ஆகாரத்தையும் நான்கு நாட்களுக்குள் திட்டமிட்டான். (அதுவும் நல்லோர், தீயோர் என்ற வித்தியாசமின்றி) கேட்போ(ர், கேட்காதோர் யாவ)ருக்கும் சமமாக)க் கிடைக்குமாறும் செய்தான்.” —அத்: 41, வச: 9, 10

அவன்தான் பூமியை உங்களுக்கு இருப்பிடமாக அமைத்து, (நீங்கள் செல்லக்கூடிய) வழிகளையும் அதில் ஏற்படுத்தி, மேகத்திலிருந்து மழையையும் வருஷிக்கச் செய்கிறான். (ஒரேவித மழை) நீரைக்கொண்டு (குணத்திலும், ரசனையிலும்) பற்பல விதமான புற்பூண்டுகளை ஜதைஜதைகளாக நாம் வெளிப்படுத்துகின்றோம்.”—அத்: 20, வச: 53

“பூமி தன் இறைவனின் கட்டளைக்குச் செவி சாய்த்து, அதற்கு விதிக்கப்பட்டுள்ளபடி தன்னிடம் உள்ளவற்றையெல்லாம் எறிந்து வெறுமனேயாகும்.” —அத்: 84, வச: 3,4,5

“பூமியின் விஸ்தீரணத்தை அதன் சுற்றுப்புறங்களில் நிச்சயமாக நாம் (படிப்படியாக) குறைத்து வருவதை அவர்கள் காணவில்லையா?”
—அத்: 13, வச: 41

பூமியைப் பற்றியும், அதன் தன்மையைப் பற்றியும், அதிலிருந்து வெளிப்படும் பொருள்களைப் பற்றியும், அவற்றின் அமைப்புகளைப் பற்றியும் அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் விவரிக்கிறான். அவற்றில் சில வசனங்களை மட்டும் எடுத்து இங்கு தரப்பட்டுள்ளது.



பூமி, சந்திரன், சூரியன் இவை அனைத்தும் ஒன்றையொன்று வட்டமிட்டுக்கொண்டு, அதே சமயம் அவை ஒவ்வொன்றும் தம்மைத்தாமே சுழன்று கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனை 1400 ஆண்டுகளுக்கு முன்பே அல்லாஹ் திருக்குர்ஆனில் அத்: 36, வச: 40—ல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

“சூரியன், சந்திரனை அணுக முடியாது; இரவு, பகலை முந்த முடியாது. (இவ்வாறே கிரகங்களும், நட்சத்திரங்களும்) ஒவ்வொன்றும் (தன்னுடைய) வட்ட வரைக்குள் நீந்திச் செல்கிறது.

தன்னைத்தானே சுழன்று கொண்டிருக்கும் பூமியின் ஆகர்ஷண சக்திதான். அதன்மீது வாழும் மனிதர்களையும், நடமாடும் இதர ஜீவராசிகளையும் இழுத்துப் பிடித்து வைத்திருக்கிறது. பூமிக்கு மட்டும் இந்த ஆகர்ஷண (இழுக்கும்) சக்தி இல்லாதிருப்பின், நடமாடும் எல்லாமே அந்தரத்தில், கனமற்ற நிலையில் தவிக்க நேரிடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அம் மாதிரி பூமி சுழலும் பொழுது மலைகள் மட்டும் இல்லாதிருப்பின், சுழலும் வேகத்தில் அதன் மேலுள்ள அனைத்தும் தள்ளாடத்தான் செய்யும். அல்லாஹ், இந்த பூமியின் அமைப்பை எவ்வளவு அழகான முறையில் செய்துள்ளான் என்பதை அறிவாளிகள் சிந்திக்க வேண்டும்.

## ஒரே நீரிலிருந்து கிடைக்கும் பல சுவைகள்!

மழை நீர் ஒரே வகையாகத்தான் பெய்கிறது. அதனால் புற்பூண்டுகள், மரஞ்செடிகள், கொடிகள் எல்லாமே விளைகின்றன. ஒரே பூமியில், ஒரே மழைநீரின் உதவி கொண்டு

வளரும் மாமரம், புளிய மரம், வேப்ப மரம் இவை போன்ற மற்றும் பல கனி தரும் மரங்களில் விளையும் கனிகளில் வெவ்வேறு வகையான ருசிகள் எப்படி வருகின்றன? இந்த கேள்விக்கு இன்றுவரை எந்த விஞ்ஞானியோ, புவியியல் நிபுணரோ பதில்கூற முடியவில்லை. இது, அல்லாஹ் மனித படைப்பின்மீது செய்த மாபெரும் கிருபையாகும். மனிதரில் நல்லோர், தீயோர் அனைவரும் இவற்றை அனுபவிக்கலாம். யாருக்கும் எந்தவிதத் தடையுமில்லை. இது அல்லாஹ்வின் இரக்க குணத்தையே காட்டுகிறது.

பூமிக்குள் எத்தனையோ பொக்கிஷங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. மனிதன் அப்பொக்கிஷங்களை அடைய முயற்சிக்கும்பொழுது, அவை அவனுக்கு அவன் முயற்சிக் கேற்ப கிடைக்கின்றன. அவற்றைக்கொண்டு மனிதன் பலனடைகின்றான். ஆக, மனிதனுக்கு பூமி தன் மேல் மட்டத்திலிருந்தும் பலன் தருகிறது. தன் உட்புறத்தி லிருந்தும் பலன் தருகிறது.

சிற்சில இடங்களில் கடல்நீர் உள்ளே புகுந்து பூமியின் பகுதியை விழுங்கிவிடுகிறது. ஒரு காலத்தில் பெரிய பெரிய அரசாங்கம் நடந்த இடங்களெல்லாம் இன்று காணாது போய்விட்டன. இதனைத்தான் அல்லாஹ், ‘பூமியின் விஸ்தீரணத்தை படிப்படியாக குறைத்து வருகிறோம்’ என்று திருக்குர்ஆனில் சுட்டிக் காட்டுகிறான். ஒரு காலத்தில் தண்ணீரில் மூழ்கி விடும் என்பதை விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர். திருக்குர்ஆனின் கூற்றுக்கும், விஞ்ஞானி கள் கூற்றுக்குமுள்ள ஒற்றுமையை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.



## கப்பல்கள் சமுத்திரத்தில் ஏன் அமிழ்வதில்லை!

இனி சமுத்திரத்தைப் பற்றியும், அதில் மிதந்து செல்லும் கப்பல்களைப் பற்றியும் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறிய தைப் பற்றியும் சிறிது ஆராய்வோம்.

தண்ணீரின் தன்மை எப்படியென்றால் இலேசான பொருள்களை மட்டும் மிதக்கவிட்டு, கனமான பொருள் களை தன்னுள் மூழ்கடித்துக் கொள்ளும். இது சர்வ சாதாரணமாக எல்லோரும் புரிந்துள்ள விஷயம். ஒரு மரத் துண்டை தண்ணீரில் போட்டால் மிதக்கிறது; இரும்புத் துண்டையோ, ஒரு சிறு கல்லையோ தண்ணீரில் போட்டால் அவை உடனே உள்ளே அமிழ்ந்துவிடும். அதே சமயம், பல மடங்கு டன் எடையுள்ள இரும்பை கப்பல் ரூபத்தில் தண்ணீரில் மிதக்கவிட்டால் அது மூழ்குவதில்லை. சிந்தித்துப் பார்த்தால் இது ஒரு பெரிய ஆச்சரியமாகவே இருக்கிறது. இதனை அல்லாஹ் திருக்குர்ஆனில் அத்தியாயம் 36, வசனம்–41, 42ல் பின் வருமாறு குறிப்பிடுகிறான்.

“கப்பல் நிறைய மனித சந்ததிகளை நாம் சுமந்து செல்வதும், நிச்சயமாக அவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும். அவர்கள் ஏறிச்செல்ல அதைப்போன்ற (சிறிய, பெரிய கப்பல்கள் முதலிய)வற்றையும் நாம் அவர்களுக்காக சிருஷ் டித்திருக்கிறோம்.

திருக்குர்ஆன் அருளப்பட்ட காலத்தில் பாய்மரக் கப்பல்கள்தான் கடற் பிரயாணத்திற்கு உபயோகப்பட்டு வந்தன. காற்றடிக்கும் திசைகளில் அக்கப்பல்கள் செல்லும். கடற் பிரயாணம் அக்காலத்தில் ஆபத்துகள் மிகைத்ததா யிருந்தது; திடீரென்று எழும் அலைகள், புயல்கள், தோன்றும்

திமிங்கிலங்களால் பேராபத்துகள் ஏற்படும். இக்காலத்திலோ விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக 40, 50 ஆயிரம் டன் எடை கொண்ட மலை போன்ற பெரும் பெருங் கப்பல்கள் கூட இயந்திரங்கள் மூலம் மிக இலகுவாக கடல்நீரை கிழித்துக்கொண்டு படு வேகத்தில் பாய்ந்து செல்கின்றன. எத்தகைய அலைகளாலும், புயல்களாலும் அக்கப்பல்களை அசைக்க முடிவதில்லை. அத்தகைய மலைகளைப்போன்ற கப்பல்களை பற்றியும் அல்லாஹ் 1400–ஆண்டுகளுக்கு முன் திருக்குர்ஆனில் அத்தியாயம்: 42, வசனம்: 32–ல் பின்வருமாறு கோடிட்டுக் காட்டுகிறான்.

(வருங்காலத்திற்கு) சமுத்திரத்தில் செல்லும் மலைகளைப் போன்ற கப்பல்களும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ள தாகும்.

இன்று நாம் பார்க்கிறோம். கப்பல்கள் ஒரு சிற்றூரைப் போலவே அமைக்கப்பட்டுள்ளன; எல்லா வகையான கடைகளும், நீச்சல் குளங்கள்கூட அவற்றில் உள்ளன. பல சிறு சிறு கப்பல்கள், விசைப் படகுகள் அவற்றில் உண்டு. பல விமானங்கள், ஹெலிகாப்டர்களைகூட சுமந்து செல்லக் கூடிய கப்பல்களும் உண்டு. 'மலைகளைப் போன்ற கப்பல்கள்' என்ற திருக்குர்ஆன் வசனத்தைக் கண்ட பாய்மரக் கப்பல்களை மட்டும் பார்த்த–அக்கால மக்கள் மிகவும் அதிசயித்துப் போயிருப்பர். ஒருவித சந்தேகம்கூட அவர்களுள்ளத்தில் ஊசலாடியிருக்கும். ஆனால் இன்று நமக்கு அந்த வசனம் சர்வசாதாரணமாகப் படுகிறது. காரணம், கண் முன்னால் அத்தகைய கப்பல்களைக் கண்டுவிட்டோம் என்பதால்.



# 9. திருக்குர்ஆனில் விஞ்ஞானத்தைக்கண்டு அதிசயித்த ஆங்கிலேயர்!

"மனிதர்கள் இறக்கும் பொழுதும், இறக்காமல் நித்திரையிலிருக்கும் பொழுதும் அல்லாஹ்வே அவர்களுடைய உயிரைக் கைப்பற்றுகிறான். பின்னர் எவர்மீது மரணம் விதிக்கப்பட்டதோ, அவர்களுடைய உயிரை (த் தன்னிடமே) நிறுத்திக் கொள்கின்றான். மற்றவர்க(ளின் உயிர்க)ளை குறிப்பிட்ட காலம் வரையில் (வாழ) அவனிடமே அவன் அனுப்பி விடுகிறான். கவனித்தறியக் கூடிய ஜனங்களுக்கு நிச்சயமாக இதில் (பல) படிப்பினைகள் இருக்கின்றன." – அத்: 39 வச: 42

"எவருடைய இதயத்தில் திருக்குர்ஆனிலிருந்து (மனப்பாடமாக) எதுவும் இல்லையோ அந்த இதயம் பாழடைந்த வீடு போன்றதாகும். திருக்குர்ஆனை நீங்களும் கற்று, அதனை பிறருக்கும் கற்றுக் கொடுங்கள்."

–அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்–அம்)

புனித இஸ்லாத்தின் அமைப்பையும், திருக்குர்ஆன் வசனங் களின் வசீகரத்தையும், இஸ்லாமிய ஷரீஅத் சட்ட விதி முறைகளின் தத்துவத்தையும், தொழுகையின் அழகிய முறையையும் கண்டு உலகில் பல மேதாவிகள், விஞ்ஞான விற்பன்னர்கள், ஆராய்ச்சியாளர்கள் இஸ்லாத்தில் தம்மை கூட்டம் கூட்டமாக இணைத்துக் கொண்டு வருவதை சர்வசாதாரணமாக கண்டு வருகிறோம். இஸ்லாத்தின் ஒவ்வோர் அம்சமும் அவர்களை கவர்ந்திழுக்கிறது. அதன் காரணமாகவே, இஸ்லாம் எவ்வித விளம்பரமுமின்றி,

பிரச்சாரமுமின்றி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டே வருகிறது. அதனை எதிர்த்து அழிக்க வேண்டும்! ஒழிக்க வேண்டும்! என்ற பேயாட்டம் போடுபவர்களே அழிந்து, ஒழிந்து வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

சிலர் திருக்குர்ஆனின் வசன அமைப்பில் சொக்கிப் போகிறார்கள். சிலர் இஸ்லாத்தின் ஷரீஅத் விதிமுறைகளில் மோகம் கொள்கிறார்கள். சிலர் இஸ்லாத்தின் வணக்க அம்சமான தொழுகை முறையைக் கண்டு காதல் கொள்கிறார்கள். மஸ்ஜிதுக்குள் ஏழை—பணக்காரர், முதலாளி—தொழிலாளி, கறுப்பர்—சிவப்பர் என்ற வித்தியாசமில்லாது ஒருவருக்கொருவர் தோளோடு தோள் உராய்ந்தவர்களாக நின்று, தங்களைப் படைத்த அல்லாஹ்வின் சந்நிதானத்தில் எல்லா மனிதர்களும் சமமே! என்று நிதர்சனப்படுத்திக் காட்டும் காட்சியைக் கண்டும், அதில் தெரியும் சகோதரத்துவம், சமத்துவத்தைக் கண்டும் நாகரீகம் முதிர்ந்த நாட்டவர்களைச் சார்ந்தோர் பலர் இஸ்லாத்தில் இணைந்து வருவதையும் நாம் பார்க்கிறோம்.

சில நாடுகளில் கறுப்பர்—சிவப்பர் போராட்டம் என்றால், சில நாடுகளில் உயர் ஜாதி—கீழ் ஜாதிப் போராட்டம்! மனிதனை மிருகத்தைவிடக் கேவலமாக கருதும் மனித பிண்டங்களும் உலகில் உண்டு! தாம் தான் ஆளும் வர்க்கம்; மற்றோரெல்லாம் அடிமைக் கூட்டம் என்று ஆர்ப்பரிக்கும் மனித மிருகங்களும் இவ்வுலகிலே உண்டு! இத்தகைய பாகுபாடு காரணமாக பாதிக்கப்படுபவர்களுக்கு உலகில் இஸ்லாம் ஒன்றுதான் விமோசனம் தந்து அவர்கள் மனித உரிமையுடன் வாழ வழிவகுத்துக் காட்டுகிறது.



## டாக்டர் அலீஸன் கண்ட அற்புதம்!

ஸஊதி நாட்டிலுள்ள ஜித்தா நகரிலிருந்து வெளியாகும் 'உகாள்' என்ற அரபி நாளேட்டில் அண்மையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. ஆத்மார்த்தீகத் துறையில் ஆராய்ச்சி விற்பன்னராக உள்ள டாக்டர் ஏ.ஜே. அலீஸன் 'மரணமும்—தூக்கமும்' என்ற பொருளின் அடிப்படையில் வெகு நீண்ட காலமாக ஆராய்ந்து வந்து, கடைசியில் திருக்குர்ஆனில் அத்தியாயம்: 39, வசனம்—42ல், இப்பகுதியின் தலைப்பில் காணும் வசனத்தில் தம் ஆராய்ச்சிக்கு விளக்கம் கண்டு, தம் நீண்டகால கேள்விக்கு விடைகண்டு, எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் 86, டிசம்பரில் நடந்த விஞ்ஞானிகள் மாநாட்டில் திருக்கலிமா ஓதி முஸ்லிமாகி, தம் பெயரை அலீஸன் அப்துல்லாஹ் என்று வைத்துக் கொண்டார்.

இவர் ஒரு பிரிட்டிஷ்காரர்; ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் விஞ்ஞான வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்துள்ளவர். பிரசித்தி பெற்ற உலக விஞ்ஞானிகளில் இவரும் ஒருவராய்த் திகழ்ந்து கொண்டிருக்கிறார். பிரிட்டிஷ் பீரோ சைகாலஜி அண்ட் ஸ்பிரீச் சுவல் ஸ்டடீஸ் சொஸைட்டியின் சேர்மேனாக ஆறு வருட காலம் வரை பணியாற்றியிருக்கிறார். அகில உலக விஞ்ஞானிகள் கழக ஆலோசகர்களில் ஒருவராயிருந்து வருகிறார். பிரிட்டனிலுள்ள ஒரு சர்வ கலாசாலையில், எலக்ட்ரானிக் இஞ்சினியரிங் பிரிவின் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

கடந்த 1986, டிசம்பர் மாதம் 8—ந்தேதி கெய்ரோவில், ''திருக்குர்ஆனும், மருத்துவ ஆராய்ச்சிகளும்'' என்ற தலைப்பில் அகில உலக விஞ்ஞானிகளைக் கொண்ட ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதில் கலந்து கொள்ளுமாறு ஏ.ஜே.

அலீஸனும் அழைக்கப்பட்டிருந்தார். டாக்டர் யஹ்யா அல்முஷர்ரஃபி, லண்டன் ஆக்ஸ்போர்ட் யுனிவர் ஸிட்டி இன்ஸ்டிட்டியூட் ஆஃப் ஸைகாலஜியின் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். அலீஸன், இவரைத் தமக்குத் துணை யாக அழைத்துக் கொண்டு கெய்ரோ வந்து மாநாட்டில் கலந்துகொண்டு 'மரணமும்—தூக்கமும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைத் தயாரித்து மாநாட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் அக்கட்டுரையைச் சமர்ப்பித்து, 'திருக் குர்ஆனும்—விஞ்ஞானமும்' என்ற தலைப்பில் ஓர் அழகான சொற்பொழிவை நிகழ்த்தி அப்பொழுதே இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்.

## இஸ்லாம் விஞ்ஞானத்தை எதிர்க்கவில்லை!

தம் சொற்பொழிவின் ஆரம்பத்திலேயே அவர், "முஸ்லிம்கள் மற்ற மதத்தவர்களிடையே இஸ்லாத்தில் காணும் விஞ்ஞானத்தைப் பற்றி விளக்குவதில் பெரும அசிரத்தை காட்டிவிட்டதைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன்" என்று குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில், "இஸ்லாம் விஞ் ஞான அடிப்படையில் அமைந்த மார்க்கமாயிருக்கிறது; தற்கால நவீன விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் எதற்கும் இஸ்லாம் எதிர்ப்புக் காட்ட வில்லை. விஞ்ஞானத்தைப் பற்றி மற்ற மதங்கள் எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு மவுனம் சாதித்துக் கொண்டிருக்கும்பொழுது, இஸ்லாம் ஒன்றுதான் விஞ்ஞானம்—டெக்னாலஜி இரண்டிற்கும் விளக்கம்தர முன்வந்துள்ளது" என்று குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "மரணத்திற்கும், தூக்கத்திற்குமுள்ள வித்தியாசத்தைப்பற்றி நான் ஆராய



வாரம்பித்தேன். நீண்டகாலமாக நான் பல வகையில் ஆராய்ந்தும், எதிலும் எனக்கு திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. பல மதக் கிரந்தங்களில் நான் தேடியும் எனக்கு திருப்திகரமான விளக்கம் கிடைக்கவில்லை. இறுதியாக, 'திருக்குர்ஆனிலும் தேடிப்பார்த்து விடலாமே!' என்று வெகு அலட்சியமாக ஆராய்ந்தேன். காரணம், திருக் குர்ஆனிலெல்லாம் இதற்கு விடை எங்கே கிடைக்கப் போகிறது? என்ற குறுகிய மனோபாவந்தான்.

"நான் திருக்குர்ஆனின் ஆங்கிலப் பதிப்பை எடுத்து படிக்கவாரம்பித்தேன். படிக்கப் படிக்க என் ஆச்சரியம் பன்மடங்கு பெருகவாரம்பித்தது. அதில் ஒரு வாசகமும் வீணானதாக இல்லை; கட்டுக்கதைகளில்லை; கற்பனை சம்பவங்களுமில்லை. அது 14—நூற்றாண்டுகளுக்கு முன் இறக்கப்பட்டிருந்தும், இன்றுள்ள மக்களுக்கும் அது பயன்படும் வகையிலிருந்தது. விஞ்ஞான ஆராய்ச்சியிலேயே பழகிப் போயிருந்த எனக்கு திருக்குர்ஆன் முழுவதும் விஞ்ஞானத்தின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதைப் போல கண்டு அதிர்ச்சியடைந்தேன். இறுதியாக, நான் நீண்ட நாட்களாக கேட்டுவந்த கேள்விக்கு, திருக்குர்ஆனில் 39—ம் அத்தி யாயத்திலுள்ள 42—ம் வசனம் எனக்கு பதிலளித்துவிட்டதைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிப்போனேன்."

## திருக்குர்ஆன் ஒளியில் விஞ்ஞானம்!

இதற்குப் பிறகு நான் திருக்குர்ஆன் ஒளியில் விஞ்ஞா னத்தை விரிவாக ஆராயவாரம்பித்தேன். இந்த வசனத் திற்கும், விஞ்ஞானத்திற்கும் தொடர்பு ஏற்படுத்த டாக்டர் யஹ்யா அல்முஷர்ரஃபியின் உதவியை நாடினேன். இரு வரும் சேர்ந்து ஆராய்ந்ததில் தூக்கத்திற்கும், மரணத்திற்கும் தொடர்பு இருப்பதை விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் கண்டு

பிடித்தோம். இந்த விஞ்ஞான இரகசியத்தைப் பற்றியும், திருக்குர்ஆனுடைய இந்த வசனத்தைப் பற்றியும் இதுவரை முஸ்லிம்கள் சிந்திக்காதிருப்பதை பற்றியும், ஆராயாதிருப்ப தைப் பற்றியும் நினைத்து மிகவும் வருந்தினேன்" என்றார்.

டாக்டர் யஹ்யா அல் முஷர்ரஃபி என்பவர், வட எமன் நாட்டைச் சார்ந்த ஒரு விஞ்ஞானி. இவர் கர்தூம் சர்வ கலாசாலையில் சிறிது காலம் பேராசிரியராகப் பணியாற்றி யுள்ளார். பிறகு இவர் பிரிட்டனுக்குச் சென்று ஆக்ஸ்போர்டு யுனிவர்ஸிட்டியில், 'ஆத்ம விசாரணை' சம்பந்தமான விரிவுரையாற்றி வந்தார். டாக்டர் ஏ.ஜே. அலீஸனுடன் நெருக் கமான தொடர்பு கொண்டிருந்தார். இவரின் தூண்டுதலின் காரணமாகவே, டாக்டர் அலீஸன் திருக்குர்ஆனில் காணும் விஞ்ஞானத்தை ஆராயவாரம்பித்தார். எகிப்தில் நடைபெற்ற விஞ்ஞானிகள் மாநாட்டில் டாக்டர் அலீஸனை கலந்து கொள்ளச் செய்வதில் இவர் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

டாக்டர் அலீஸன் மேலும் தொடர்ந்து பேசுகையில், "ஓர் ஆணோ, பெண்ணோ தூங்கும்பொழுது ஒரு 'பொருள்' அவர்களைவிட்டு நீங்கிவிடுகிறது; பிறகு அப்பொருள் மீண்டும் திரும்ப வந்து விடும்பொழுது, அவர்களுக்கு விழிப்பு வந்து விடுகிறது. மனிதன் மரணிக்கும்பொழுது வெளியேறும் இப்பொருள் மீண்டும் திரும்ப வருவதில்லை. இதன் விளக்கத்தைத்தான் திருக்குர்ஆனின் (இப்பகுதியின் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும்) வசனம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

## தூக்கம் ஒரு சிறு மரணமாகும்!

'தூக்கம் சிறு மரணம்' என்று அண்ணல் நபி (ஸல்—அம்) அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். 'தூக்கம் எப்படி சிறு



மரணமாகும்?' என்று சிலர் வினா எழுப்பலாம். மனிதன் தூங்கும்பொழுது, அவனின் ஐம்புலன்களும் செயலற்று விடுவதை நம்மால் மறுக்க முடியாது. கண் சிலர் தூங்கும்பொழுது திறந்திருக்கும். ஆனால், அப்பொழுது அது பார்க்கும் சக்தியை இழந்து விடுகிறது. காது கேட்கும் சக்தியை இழந்துவிடுகிறது. தூங்குபவரின் அருகில் என்ன நிகழ்ந்தாலும் அவரால் அதனை உணர முடிவதில்லை. மரணத்திலும் மனித நிலை இதுதானே! பிறகு தூக்கம் சிறு மரணம் என்ற கூற்றில் எப்படிக் குறைகாண முடியும்?

திருக்குர்ஆனிலுள்ள விஞ்ஞானத்தைப் பிரபலப்படுத்த முஸ்லிம்கள் முயற்சிக்காது போனதைக்கண்டு என்னால் வருந்தாமலிருக்க முடியவில்லை. பிற சமுதாயத்தினரிடையே இந்த விஷயங்களை அவர்கள் விவரித்திருக்கலாம். மற்ற சமுதாயத்தினர், குறிப்பாக ஹிந்துக்கள் தங்கள் கலாச் சாரத்தைப் பற்றியும், பண்பாடுகளைப் பற்றியும் பிற சமுதா யத்தினர் கொண்ட பெரும் கூட்டங்களில் பிரமாதமாக பிரச் சாரம் செய்கின்றனர். கிறிஸ்தவர்களும் அவ்வாறே தங்கள் மதத்தைப் பற்றி பிற மதஸ்தர்கள் கொண்ட பெருங் கூட்டங்களிலே பிரச்சாரம் செய்கின்றனர்.

முஸ்லிம்கள் மட்டும் தங்களிடம் இவ்வளவு பெரிய பெரிய பொக்கிஷங்களை வைத்திருந்தும்கூட, அவற் றைப் பற்றி பிற மதஸ்தர்கள் கொண்ட ஒரு சிறு கூட்டத்திலும்கூட பிரஸ்தாபிப்பதில்லை. இந்த விஷயங்களையெல்லாம் பிற மதஸ்தரிடம் பிரஸ்தாபித்து முஸ்லிம்கள் பேரிலுள்ள பெரிய கடமை அல்லவா?

## இஸ்லாத்தை வெற்றிகொள்ள யாராலும்முடியாது!

"நம் இங்கிலாந்து நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஹிந்துக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின்

மதத் தலைவர்கள் அவர்கள் முன்னேற்றமடைய பல துறைகளிலும் பாடுபடுகின்றனர். இந்த இடத்தில் ஒன்றை வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். ஹிந்துக்களும், ஹிந்துமதத் தலைவர்களும் எவ்வளவுதான் முயற்சித்தாலும் முஸ்லிம்கள் காண முடிகின்ற வெற்றியை ஹிந்துக்களால் காண கண்டிப்பாக முடியாது. காரணம் இஸ்லாம் பகுத்தறிவின் அடிப்படையில் இல்லை. மேற்கத்திய மக்கள் பகுத்தறிவை அதிகம் விரும்புகின்றனர். பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்துள்ள இஸ்லாமிய கலாச்சாரத்தைப் பற்றியும், திருக்குர்ஆனில் காணும் விஞ்ஞான வழிமுறைகளைப் பற்றியும் மேற்கத்திய மக்களிடையே முஸ்லிம்கள் பிரச்சாரம் செய்யவாரம்பிப்பார்களேயானால், நிச்சயம் அவர்கள் மாபெரும் வெற்றிகாண முடியும். ஏனெனில், இஸ்லாம் பகுத்தறிவையும், ஆராய்ச்சியையும் மெய்யுணர்ச்சியையும் அதிகம் விரும்புகிறது; விஞ்ஞானிகளும் இவற்றையே விரும்புகின்றனர்.

## முஸ்லிம்கள் முன்வர வேண்டும்!

“திருக்குர்ஆனில் காணும் விஞ்ஞானத்தை மற்ற சமுதாயத்தினரிடையே பரப்பவும், திருக்குர்ஆனில் காணும் படிப்பினைகளை போதிக்கவும் தனியாக ஓர் ‘இன்ஸ்டிட்யூட்’ ஆரம்பிக்க நாடியுள்ளேன். இதில் சில புதிய அணுகுமுறைகளையும் நான் இணைக்க உத்தேசித்துள்ளேன். திருக்குர்ஆன் அடிப்படையிலுள்ள கல்வியை ‘அப்ளயிட் ஸயன்ஸ்’ திட்டத்தில் சேர்த்து, மேலைநாட்டு மக்களுக்கு குறிப்பாக மேலைநாட்டு விஞ்ஞானிகளுக்கும், டெக்னாலஜி நிபுணர்களுக்கும் இஸ்லாத்தைப்பற்றி விஞ்ஞான அடிப்படையில் விளக்கம் தரப்போகிறேன்.

“முஸ்லிம்களும் இனி விஞ்ஞான அடிப்படையில் திருக்குர்ஆனுக்கு விளக்கம்தர முயல வேண்டும். அப்பொழுது தான் விஞ்ஞான யுகத்தில் வளர்ந்து வரும் மக்கள் சமுதாயத்தின் முன் திருக்குர்ஆனின் சிறப்பை உயர்த்திக் காட்ட முடியும். இனி, என் மீதி வாழ்வையும், முயற்சியையும் இதற்காகவே செலவிடப் போகிறேன். அல்லாஹ் எனக்கு வெற்றியளிப்பானாக! என்று தம் உரையை முடித்தார் டாக்டர் அலீஸன் அப்துல்லாஹ்.



## மன நிறைவு தந்த இஸ்லாம்!

டாக்டர் அலீஸன் அப்துல்லாஹ் தம் வாழ்நாட்களில் எப்பொழுதுமே மது அருந்தியதில்லை; பன்றி இறைச்சியையும் புசித்ததில்லை. மாநாட்டு இறுதியில், எகிப்து மந்திரி அஹ்மதி அபுந்நூர் தம் முடிவுரையில், இஸ்லாமிய ஆராய்ச்சி நிபுணர்கள் கமிட்டியில் டாக்டர் அலீஸன் அப்துல்லாஹ்வையும் ஓர் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டதாகக் குறிப்பிட்டார். மக்கள் பெருத்த மகிழ்ச்சியுடன் கரவொலி எழுப்பினர். அல்லாஹு அக்பர்! இஸ்லாம் வாழ்க! என்று விண்ணதிரக் குரல் கொடுத்தனர்.

பத்திரிக்கை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் டாக்டர் அலீஸன் அப்துல்லாஹ் பேசுகையில், “நான் முஸ்லிமானது அல்லாஹ் என் பேரில் செய்த மாபெரும் கிருபையாகும். நான் இப்பொழுது முழு மனிதனின் அந்தஸ்தைப் பெற்று விட்டேன் என்ற மனநிறைவைக் காண்கிறேன்” என்று குறிப்பிட்டார்.

# 10. கிழக்கும் மேற்கும் இணைய வேண்டும்!

"நிச்சயமாக, இது மிக்க கண்ணியமுள்ள குர்ஆனா கும். (இது லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) பாதுகாக்கப்பட்ட புத்தகத்தில் (எழுதப்பட்டுள்ளது.) பரிசுத்தவான்களைத் தவிர (மற்றெவரும்) இதனைத் தொட மாட்டார்கள். எல்லா உலகங்களின் இறைவனால் இது அருளப்பட்டது. ஆகவே இதிலுள்ள விஷயங்களையும் நீங்கள் அலட்சியம் செய்கின் றீர்களா?"

—அத்: 56, வச: 77 முதல் 81 வரை

'திருக்குர்ஆனை ஓதக்கூடியவர்கள், அதனை ஓதும்பொழுது, நன்றாக கூர்ந்து ஓதவும். அதிலுள்ள அற்புதங்களைத் தேடவும்."

—அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்)

டாக்டர் அலீஸன் அப்துல்லாஹ் கூறுவது ஒரு வகையில் உண்மையாக இருந்தாலும் முழுவதையும் உண்மையானது என்று நம்மால் ஏற்க முடியாது. ஏனெனில், சுமார் 400, 500 ஆண்டுகளுக்கு முன் வரை, முஸ்லிம்கள் திருக்குர்ஆன் ஒளியில் விஞ்ஞானத்தை வளர்க்கத்தான் செய்தனர். பல அற்புதங்களை நிகழ்த்தத்தான் செய்தனர். ஆனால், சுயநலம் பிடித்த யூதர்களும், கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களின் இந்த முன்னேற்றத்தைச் சூழ்ச்சிசெய்து நாசப்படுத்தி விட்டனர். முஸ்லிம்களின் 800வருட ஆட்சியை ஸ்பெயினிலிருந்து அஸ்தமிக்கச் செய்ததோடல்லாது, அவர்கள் கண்டுபிடித்து வைத்திருந்த நவீன உத்திகளையும், எழுதி வைத்திருந்த நூற்களையும் தீயிட்டுப் பொசுக்கி விட்டனர். இந்த விளக்கத்தை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஆனால்,



இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகும் மீண்டும் நாம் அந்த முயற்சியில் இறங்காமலிருப்பதும் அல்லது மற்றவர் களைப்போல அந்த அளவு ஆர்வம் காட்டாமலிருப்பதும் நம்முடைய பெரிய தவறுதான்!

## பட்டதாரிகளும், உலமாக்களும் ஒன்றுபட வேண்டும்!

இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றும் உள்ளது; நம் சமுதாயத்தில் மார்க்கக் கல்வி பயின்றவர்கள் ஒரு தனி பிரிவாகவும், உலக கல்வி பயின்ற வர்கள் ஒரு தனி பிரிவாகவும் செயல்பட்டு வருவது வேதனைக்குரிய விஷயமே! இஸ்லாம் இந்த இரண்டு துறை களையும் ஒன்றுபடுத்தி வைத்தும் நீண்ட காலமாகவே இவர்கள் பிரிந்தே செயல்பட்டு வருகின்றனர். மார்க்கக் கல்வியை கற்றவர்களை உலகக் கல்வியைக் கற்றவர்கள், 'உலகம் தெரியாத கிணற்றுத் தவளைகள்' என்று வர்ணிப்ப தும், உலகக்கல்வி கற்றவர்களை மார்க்கக் கல்வி கற்ற வர்கள், 'மார்க்கமறியாத மண்டூகங்கள்' என்று வர்ணிப்பதும் இன்று சகஜமாகிவிட்டது.

இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்கு முக்கிய மான காரணம் மார்க்கக் கல்வி கற்பவர்கள் உலக கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுவதில்லை; அதுபோலவே உலக கல்வி கற்பவர்களுக்கு மார்க்கக் கல்வி கற்ப வாய்ப்பு ஏற்படுவ தில்லை. எனவே, இந்த இரண்டு கல்வி முறைகளும் வெவ்வேறு வகையில் அமைந்திருப்பதால் இந்த இரண்டு பிரிவினருடைய பழக்கவழக்கங்களும், சுற்றுச் சார்புகளும் மாறுபட்ட நிலையிலேயே வளர்கின்றன. மார்க்கக் கல்வியில் பரிபூரணத்துவம் பெற குறைந்தது பத்து வருடம் ஆகிறது.

அதேபோன்று உலக கல்வியில் பரிபூரணத்துவம் பெறவும் பத்து வருடமாகிறது. இந்த கால அளவு ஒருவேளை கூடுமே தவிர, குறைவதற்கு சந்தர்ப்பம் இல்லை. இந்த இரு கல்வித் துறைகளிலும் பட்டங்கள் தரப்படுகின்றன. மார்க்கக் கல்வியில் பட்டம் பெறுபவர்கள் மஸ்ஜிதுகளில், மார்க்கக் கல்விக் கூடங்களில்தான் பெரும்பாலும் உத்தியோகத்தைப் பார்த்து, அதில் கிடைக்கும் சொற்ப ஆதாயத்தைக் கொண்டே தம் வாழ்க்கைப்படகை உலகமென்னும் சமுத் திரத்தில் செலுத்த வேண்டியிருக்கிறது. உலகக் கல்வியை கற்று பட்டம் பெறுவோர், பெரும் பெரும் பதவிகளைப் பெற்று, நல்ல ஊதியம் அடைந்து உல்லாசமாக வாழ முடிகிறது. ஆனால், மார்க்கக் கல்வி கற்காததால் அவர் களின் வாழ்வில் பெரும்பாலோருக்கு இஸ்லாமிய ஆசார மில்லாது போய்விடுகிறது. எனவே, இத்தகையோரில் சிலர் விலைமதிக்க முடியாத தம் ஈமானையும் இழந்துவிடும் சூழ்நிலையில் சிக்கி விடுகின்றனர்.

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

இந்த இருவகையினரும் ஒருங்கிணைந்து செயல்பட வாரம்பித்தால் முஸ்லிம் சமுதாயம் எவ்வளவோ சீரும் சிறப்பு மாக வாழ முடியும். அதற்கான ஒரு வழி கண்டு பிடித்தல் தற்சமயம் மிக அத்தியாவசியமாகிவிட்டது. ஏனெனில், மற்ற சமுதாயத்தின் முன் எல்லாத் துறையிலும் நாம் சிறந்து விளங்க வேண்டுமென்றால், திருக்குர்ஆனிலுள்ள விஞ்ஞா னத்தை உலக மக்கள் முன் நாம் எடுத்துக்காட்ட வேண்டு மென்றால், நம்மிலுள்ள இரு வகையினரும் ஒன்றுபட வேண்டும். ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும். தற்போதையச் சூழ்நிலையில் மார்க்கக் கல்வியில் பட்டம் பெறாத ஒருவர் மார்க்க சம்பந்தமான ஒரு



விஷயத்தை எடுத்து சொன்னால், மார்க்கக் கல்வியில் பட்டம் பெற்றவர்கள் அது சரியான கருத்தாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதில்லை. 'அவர் என்ன மௌலவியா? ஆலிமா? என்று மடக்குகின்றனர். இதேபோன்று மார்க்கக் கல்வியில் பட்டம்பெற்ற ஒருவர், விஞ்ஞான சம்பந்தமாக ஒரு பிரச்சினையை விளக்க முற்படும் பொழுது, அது சரியான தாக இருந்தாலும்கூட உலக கல்வியில் பட்டம் பெற்றவர், 'விஞ்ஞானம் பற்றிச் பேச இவர் என்ன பி.எஸ்.ஸியா? எம்.எஸ்.ஸியா? என்று மடக்குகின்றனர். இஸ்லாத்தை வளர்க்க, திருக்குர் ஆனிலுள்ள விஞ்ஞானத்தை வளர்க்க, நபி வழியைப் போதிக்க இந்த பட்டங்கள் அவசியந்தானா? என்று இரு வகையினரும் சிந்திக்க வேண்டும். இரு வகையினரிலும் குறைகள் இருக்கலாம்; அதற்காகவென்று இந்த இரு வகையினரும் ஒரேயடியாக ஒருவரையொருவர் மட்டந்தட்டிக் கொள்வது விவேகமாகாது.

## கொள்ளைக் கூட்டத் தலைவர் ஷேய்க்காக மாறின விந்தை!

இஸ்லாத்தை வளர்க்க, கலிமா சொன்ன ஒவ்வொரு உண்மை முஸ்லிமுக்கும் உரிமை உண்டு. அல்லாஹ், தான் நாடிய எவரைக்கொண்டும் தன் இஸ்லாம் மார்க்கத்தை வளர்க்கும் ஆற்றலுள்ளவன். ஒவ்வொரு சாதாரண மனி தரைக் கொண்டும் பிரமாண்டமான வேலையை வாங்கிக் கொள்கிறான். இது, அவன் தனி சக்தியாகும். நம் முன்னோர்களின் வரலாற்றைப் பார்க்கும்பொழுது, இந்த உண்மை நமக்கு விளங்குகிறது. ஹல்ரத் புளைல் இப்னு அயாள் (ரஹ்) அவர்கள், ஒரு கொள்ளைக் கூட்டத்தின் தலைவராக வாழ்க்கை நடத்தி வந்தார்கள். வனாந்திரங்களில் தம் பரிவாரத்தோடு ஒளிந்திருந்து வியாபாரிகள் கூடார

மடித்து இளைப்பாறிக் கொண்டிருக்கும் இடத்தைச் சுற்றி வளைத்து, அவர்களின் பொருள்களை கொள்ளையடிப்பது அவர்களின் வழக்கம். வழமைப்போல ஓரிரவு, ஒரு வியாபாரிகளின் கூட்டத்தை சுற்றி வளைத்துக்கொண்டு, அவர்களின் கூடாரங்களை நோட்டமிட்டு வரும்பொழுது ஒரு கூடாரத்திலிருந்த வியாபாரி திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார். அதனைக்கேட்ட ஹல்ரத் புளைல் இப்னு அயாள் (ரஹ்) அவர்கள் ஞானோதயம் பெற்று, திருட்டு தொழிலை விட்டு ஒரு பெரிய ஷேய்க்காக மாறிவிட்டதையும், அவர்களைக் கொண்டு பன்னூற்றுக் கணக்கானோர் இஸ்லாத்தை ஏற்றதையும் நம்மால் சரித்திர ஏடுகளிலே காண முடிகிறது. இப்படி பல வரலாறுகளையும் நாம் சர்வ சாதாரணமாக காணலாம்.

## இமாமுக்கு 'மஸ்அலா' சொன்ன செருப்பு தைப்பவன்!

அல்லாஹ், தன் அடியார்களில் எவரையும் வீணுக்காக படைக்கவில்லை; ஒவ்வோர் சாதாரண அடியானிடத்திலும் ஒரு விசேஷமான அறிவைக் கொடுத்துள்ளான். ஒரு தடவை ஹல்ரத் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள், வழியில் நடந்து செல்லுகையில், ஒரு நாய் சிறுநீரை கழித்துக் கொண்டிருப்பதை வெகு ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதனை கவனித்த செருப்பு தைக்கும் தொழில் செய்து கொண்டிருந்த ஒருவர் அதிசயத்துடன், 'ஹல்ரத்! தாங்கள் இவ்வளவு பெரிய இமாமாக இருந்து கொண்டு, ஒரு நாய் சிறுநீர் கழிப்பதை இப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே?" என்றார். உடனே ஹல்ரத் அவர்கள், "ஆம், அப்பா! இந்த நாய்கள் சில சிறு நீரைக் கழிக்கும்பொழுது ஒரு காலை உயரத் தூக்கிக் கொள்



கின்றன. சில, நான்கு கால்களையும் ஊன்றியவாறு சிறுநீர் கழிக்கின்றன. இதன் காரணத்தை விளங்காது யோசனையிலாழ்ந்து நின்றேன்" என்றார்கள். இதனைக் கேட்ட அந்த செருப்பு தைத்து கொண்டிருந்த தொழிலாளி, "இவ்வளவு பெரிய இமாமாகிய தங்களுக்கு இந்தச் சின்ன விஷயம் தெரியாது போய் விட்டதா? நாய் பருவ வயது வரும்வரை நான்கு கால்களையும் ஊன்றியவாறே சிறுநீரைக் கழிக்கும். பருவ வயது வந்ததும் ஒரு காலை உயர்த்திக் கொண்டு சிறுநீர் கழிக்கும். இதுதான் காரணம்!" என்றார், அந்த செருப்பு தைத்துக்கொண்டிருந்த தொழிலாளி. "அப்பா! இந்த விஷயம் இன்றுதான் எனக்கு விளங்கிற்று. இந்த 'மஸ்அலா' வில் நீதான் எனக்கு ஆசிரியனாகிவிட்டாய்!" என்றார்கள் ஹல்ரத் அவர்கள்.

## அறிவில் சிறந்தவர் யார்?

எனவே, 'யார் சொல்கிறார்?' என்பதைப் பற்றி பரிசீலிக்காது 'என்ன சொல்கிறார்?' என்று கவனித்தால் இந்தப் பிரச்சினை வெகு எளிதில் நிவர்த்தியாகிவிடும். கனிகள் அதிகம் காய்ந்த மரம்தான் தாழ்ந்து நிற்கும்; நிறைந்த குடம்தான் தளும்பாது. சிறிது கல்வி கற்றதும் தன்னைப் 'பெரிய அறிவாளி' என்று நினைத்துக் கொள்வதும், நான்கு வார்த்தைகள் பேசக் கற்றதும் தன்னைப் பெரிய பேச்சாளி' என்ற கருதிக் கொள்வதும் பெரிய அறியாமைதான்! அறிவில் சிறந்தவன் அல்லாஹ் ஒருவன் தான்! அவனுக்கு அடுத்த ஸ்தானம் வகிப்பவர்கள் அண்ணல் நபி (ஸல்—அம்) அவர்கள். இந்த உண்மையைப் புரிந்து கொண்டால், இந்த இரு பிரிவினரும் திருந்திக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும். எல்லோருமே தம்மை 'இஸ்லாத்தின் ஊழியர்கள்' என்பதை ஏற்றுக்கொண்டால் இஸ்லாம் சுடர்விட்டுப் பிரகாசிக்க ஏதுவாக அமைந்துவிடும்.

# 11. திருக்குர்ஆன் வளர்ச்சியும்-விஞ்ஞான வளர்ச்சியும்

"நிச்சயமாக (குர்ஆனாகிய) இது உண்மையானதுதான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் வரையில், நம்முடைய அத்தாட்சிகளை (உலகத்தின்) பல பாகங்களிலும், அவர்களுக்குள்ளாகவும் அதிசீக்கிரத்தில் நாம் அவர்களுக்குக் காண்பிப்போம்."

—அத்: 41, வச: 53

"உங்களுடைய வீடுகளில் திருக்குர்ஆனை அதிகமாக ஓதுங்கள்; ஏனெனில் திருக்குர்ஆன் ஓதப்படாத வீடுகளில் நன்மை குறைந்து கெடுதி அதிகரிக்கும். மேலும், அந்த வீட்டை உடையவர்கள் பால் இடுக்கண் உண்டாகும்." - அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்)

இன்றைய மனிதன் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஆதாரம் கேட்கிறான். ஆதாரமில்லாத விஷயத்தை நம்ப மறுக்கிறான். விஞ்ஞானத்துறையிலும் சரி; மருத்துவத் துறையிலும் சரி! இதர எந்தத் துறையாயினும் சரியே! சரியான ஆதாரத்தோடு நிரூபிக்காதவரை எதனையும் அவன் ஏற்பதில்லை. இஸ்லாம் கூறிவந்த ஏகத்துவம், நபித்துவம், நரகம், சுவர்க்கம், மறுமை, மிஃராஜ் சம்பவம், வானவர், ஸிராத்துல் முஸ்தகீம், மறுமையில் மனிதன் கையில் தரப்படவிருக்கும் பட்டோலை போன்ற எதனையும் அவன் நம்பத் தயாராயில்லாதிருந்தான். அவற்றிற்கு ஆதாரம் வேண்டும்; கண்ணால் காண வேண்டும்; பகுத்தறிவு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் அடம்பிடித்து வந்தான். திருக்குர்ஆன் அல்லாஹ்வினால் அருளப்பட்டது என்பதையும் மறுத்து வந்தான். நபிமார்கள், வலிமார்கள் மூலம் நிகழ்ந்த அற்புதங்களையும் நம்ப மறுத்தான். ஆனால், இவையனைத்தும் உண்மை



யானது. ஒரு முஸ்லிம் இவற்றை நம்ப மறுத்தால் அவனை 'முஸ்லிம்' என்று முஸ்லிம் சமுதாயம் ஏற்காது. ஏனெனில், இவற்றின் பேரிலெல்லாம் நம்பிக்கை கொண்டே விசுவாசங் கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் விதி வகுத்துள்ளது; 'மறைவானவற்றின் மீதும்விசுவாசங்கொள்ள வேண்டும்' என்றும் அல்லாஹ் திருக்குர்ஆன் மூலம் கண்டித்துள்ளான்.

## கண்ணால் காணாததையும் நம்ப வேண்டிய நிலை!

சில சந்தர்ப்பங்களில் தன் இயலாமையின் காரணமாக அல்லது தப்பிக்க வேறு வழியில்லாததன் காரணமாக, கண்ணால் காண முடியாததையும் மனிதன் நம்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படத்தான் செய்கிறது. இத்தகைய கட்டத்தில் தான், அல்லாஹ்வின் சக்தியை ஏற்றுக்கொள்ள வேண்டிய நெருக்கடி அவனுக்கு ஏற்படுகிறது. உதாரணமாக, காற்றைக் கண்ணால் காண முடிவதில்லை; எனவே, அதன் உருவத்தையும் மனிதனால் நிர்ணயிக்க முடிவதில்லை. அப்படியிருந்தும், 'காற்று' என்று ஒன்று உண்டு; அது மிக சக்தி வாய்ந்தது. அதனால், பெரும் பெருங் கூரைகளையும் பெயர்த்தெறிந்திட முடியும்! இரும்பைக்கூட பறக்கச் செய்துவிட முடியும் என்பதை அவன் ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. இதேபோன்று மனிதரின் ஆத்மா (ருஹ்) இந்த ஆத்மாவை மனிதனால் பார்க்க முடிவதில்லை. அது எந்த வடிவில், உடலின் எந்த பாகத்தில் இருக்கிறது என்பதையும் திட்டமாக கூற மனிதனால் முடிவதில்லை. கண்ணால் காண முடியாத அந்த ஆத்மா, மனித உடலிலிருந்து பிரிந்து சென்று விட்டால், மனிதனை 'மனிதன்' என்று கூற முடியாது. அவனைப் 'பிணம்' என்றுதான் கூற முடியும். ஆத்மாவைக் கண்ணால் பார்க்க முடியவில்லையென்று

காரணம் காட்டி, ஆத்மாவை நம்பாமல் மனிதனால் இருக்க முடியவில்லை.

## ஆல விதையில் காணும் அதிசயம்!

ஒரு பெரிய ஆலமரம்; அதற்கு பல நூறு விழுதுகள்; அந்த மரத்தின் நிழலில் 500–பேர் வரை தங்க இட முண்டு. பல வாகனங்களும் நிற்க வைக்க வசதி உண்டு. இவற்றையெல்லாம் மனிதன் விரைவில் நம்பி விடுகிறான். ஏனெனில், அவை அவன் கண்களுக்கு நன்றாகத் தெரிகின்றன. அதே சமயம், கடுகு அளவுள்ள ஆல மரத்தின் விதையை அவனிடம் காட்டி, இந்த விதைக்குள் ஒரு பெரிய மரமிருக்கிறது; அதிலே பல நூறு விழுதுகள் உண்டு; 500–பேர்வரை தங்கலாம்; பல வாகனங்கள் நிற்கவும் அதில் இட முண்டு! என்று சொன்னால் அவன் நம்ப மறுக்கிறான். ஆனால், விஷயம் என்னவோ உண்மை தான். மனிதனின் அறிவு இந்த அளவுதான் வேலை செய்கிறது. எனவே, எதனையும் கண்ணால் கண்ட பிறகுதான் நம்ப முடியும். தக்க ஆதாரம் காட்டினால்தான் ஏற்றுக் கொள்ள முடியும் என்று பிடிவாதம் செய்தால் என்ன பிரயோஜனம்?

## ராக்கட்டும், டேப்ரிக்கார்டரும் மெய்ப்பித்தன!

விஞ்ஞானம் வளர வளர, மனிதனின் ஆராய்ச்சி விரிவடைய விரிவடைய இஸ்லாம் இயம்பிக் கொண்டிருக்கும் மறைவான பல விஷயங்களை 'உண்மைதான்!' என்று ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் மனிதனுக்கு ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. திருக்குர்ஆன் கூறிய மறைவான விஷயங்களையும் அவனால் நம்ப வேண்டித்தான்



ஆகி வருகின்றது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்–அம்) அவர்கள் அல்லாஹ்வை சந்திக்க (மிஃராஜ்) ஏழு வானங்களை நொடிப்பொழுதில் கடந்தார்கள் என்று இஸ்லாம் 1400 ஆண்டுகளுக்கு முன் கூறியபொழுது, ஒரு காலத்தில் மனிதன் எள்ளி நகையாடினான்; 'இது ஆகக்கூடிய காரியமா? பகுத்தறிவு ஏற்குமா?' என்று பரிகசித்தான். ஆனால், 'ராக்கட்' மூலம் மனிதன் மின்னல் வேகத்தில் சந்திர மணடலத்தை அடைந்து விட்டதும், அவனுக்கு, அண்ணலார் நொடிப் பொழுதிலே ஏழு வானங்களைக் கடந்த விஷயம் ஆச்சரியமாக இல்லாது போய்விட்டது. மனிதன் செய்யும் ஒவ்வொரு செயல்களும் அவனின் பட்டோலையில் பதியப்பட்டு, மறுமை நாளன்று அவன் கையிலேயே கொடுக் கப்பட்டு, அவனைக்கொண்டே அதனைப் படிக்க ஏவப்படும் என்று இஸ்லாம் 1400–ஆண்டுகளுக்கு முன் கூறிய பொழுது, ஒரு காலத்தில் இதே மனிதன், 'இதென்ன பைத்தியக் காரப் பேச்சு! பட்டோலையாவது? பதியப்படுவ தாவது? படிக்கச் செய்வதாவது? என்று பல்லை இளித்தான். ஆனால், 'டேப்ரிக்கார்டர்' கண்டுபிடிக்கப்பட்டு, தன் குரலை தானே 'கேஸட்' நாடாவில் பதித்து, தானே கேட்கக்கூடிய நிலை வந்ததும் வெட்கத்துடன் வாயை மூடிக் கொண்டான்.

திருக்குர்ஆன், ஒரு விஞ்ஞான நூல் அல்ல; அதே சமயம் விஞ்ஞானம் போன்ற எல்லாத் துறைகளின் தாயாக இருக்கிறது. காரணம், திருக்குர்ஆனை அல்லாஹ் அருளி னான்; விஞ்ஞானத்தை மனிதன் கண்டுபிடித்தான். அல்லாஹ் வின் அறிவு கடல் போன்றது என்றால், மனிதனின் அறிவு கடுகு போன்றது என்பதையும் நாம் அறிந்து வைத்துள்ளோம். திருக்குர்ஆன் மூலம் அல்லாஹ் பல இரகசியமான விஷயங் களையெல்லாம் வெளிப்படுத்தியுள்ளான். ஆரம்பத்தில், மனிதன் திருக்குர்ஆனிலுள்ள எல்லா விஷயங்களையும்

மறுத்து வந்தான். நாளாவட்டத்தில் அவனின் அறிவு விரிவடைய, விரிவடைய திருக்குர்ஆனில் காணும் ஒவ்வோர் இரகசியங்களையும் விளங்கிக் கொள்ளவாரம்பித்தான். அந்த விளக்கத்திற்குதான் அவன் 'விஞ்ஞான வளர்ச்சி' என்று பெயர் வைத்தான்.

## திருக்குர்ஆன் வளர்ந்துவிட்டது; விஞ்ஞானம் இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிறது!

திருக்குர்ஆன் அருளப்பட்டு 1400–ஆண்டுகளாகியும், விஞ்ஞானம் இவ்வளவு தூரம் வளர்ந்துவிட்ட பிறகும்கூட, திருக்குர்ஆனில் காணும் சில விஷயங்களை மனிதனால் கிரகிக்க முடியவில்லை. அதாவது, அவனுக்கு துணையாக நிற்கும் விஞ்ஞானம் இன்னும் முதிர்ச்சி பெறவில்லையென்பதுதான் அதன் பொருள். திருக்குர்ஆன், தான் வெளியிட்ட விஷயங்களுக்கு எல்லை வகுத்துக் கொண்டது. எனவே மேற்கொண்டு எந்த விஷயங்களையும் அதற்குள் திணிக்கத் தேவையில்லை. ஆனால், விஞ்ஞானத்தின் நிலை அப்படியில்லை; அது இன்னும் பல விஷயங்களில் வளர வேண்டியிருக்கிறது. உதாரணமாக, கட்டை வண்டியைக் கண்டுபிடித்த விஞ்ஞானியை சைக்கிள் வண்டியைக் கண்டு பிடித்த விஞ்ஞானி தோற்கடித்து விட்டான்; சைக்கிள் வண்டியைக் கண்டுபிடித்த விஞ்ஞானியை மோட்டாரை கண்டுபிடித்த விஞ்ஞானி மண் கவ்வச் செய்து விட்டான். மோட்டாரைக் கண்டுபிடித்த விஞ்ஞானியை இரயிலினைக் கண்டுபிடித்த விஞ்ஞானி புறமுதுகு காட்டி ஓடச் செய்து விட்டான். இரயிலினைக் கண்டுபிடித்த விஞ்ஞானியை விமானத்தைக் கண்டு பிடித்த விஞ்ஞானி மூக்கறுபடச் செய்து விட்டான். விமானத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞா



னியை ராக்கெட்டைக் கண்டுபிடித்த விஞ்ஞானி மொட்டையடித்து விட்டான். இந்தப் படலம் இத்துடன் நின்றுவிட்டதா? என்றால், 'இல்லை; இன்னும் பல கட்டங்கள் வரத்தான் போகின்றன' என்றுதான் பதில் கிடைக்கிறது. எனவே விஞ்ஞானம் இன்னும் வளர வேண்டியுள்ளது என்பது இதன் பொருள் என்று கூறுகிறோம்.

## திருக்குர்ஆன் காட்டும் பாதையில் விஞ்ஞானம் செல்ல வேண்டும்!

இன்று உலகில் கண்டுபிடிக்கப்படும் ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புகளின் நிலையும் இப்படிதான் இருக்கிறது என்பதை நாம் ஒவ்வொரு சாதனங்களிலும் காணுகிறோம். ஆனால், திருக்குர்ஆன் நிலை அப்படியில்லையென்பது எல்லோரும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். எனவே, இன்றைய விஞ்ஞானிகள் திருக்குர்ஆன் காட்டும் ஒளியில் தான் விஞ்ஞானத்தின் வளர்ச்சியைக் காணவேண்டுமே தவிர இன்றைய பூர்த்தி பெறாத விஞ்ஞான ஒளியில் திருக் குர்ஆனை ஆராய முற்படக்கூடாது. அப்படி முற்பட்டாலும் அது பெரிய ஏமாற்றத்தில்தான் வந்து முடியும். காரணம், திருக்குர்ஆன் விஞ்ஞான வளர்ச்சிக்காக என்ற ஒரே குறிக்கோளை அடிப்படையாக வைத்து மட்டும் அருளப்பட்ட தல்ல. அதன் வசனங்கள் மிக எளிமையானது; பாமரன்–பண்டிதன், பணக்காரன்–ஏழை, கறுப்பன்–சிவப்பன், முதலாளி, தொழிலாளி ஆகிய எல்லா வகையினரும் புரியக்கூடிய, பலன்பெறக்கூடிய, அறிவு பெறக்கூடிய வகையில் அது அருளப்பட்டுள்ளது. எனவே, விஞ்ஞானம் தன் போக்கில் திருக்குர்ஆனை இழுக்க முற்படாது. திருக்குர்ஆன் போகிற பாதையில் விஞ்ஞானம் செல்ல முற்பட்டு விட்டால் பிரச்சினை எவ்வித மோதலுமின்றி சுமுகமாக முடிந்துவிடும்.

எனவேதான், திருக்குர்ஆன் காட்டும் ஒளியில் விஞ்ஞானம் வளர வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறோம். இந்த யோசனையை இன்றைய விஞ்ஞானிகள் மறுதளிக்கலாம்; ஆனால், இவர்களுடைய சந்ததியினர் அல்லது எதிர்கால விஞ்ஞானிகள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலை வந்தே தீரும்.

அல்லாஹ் படைப்பதும் ஜோடி! படைப்புகள் அனைத்தும் ஜோடி ஜோடியாகவே படைக்கப்பட்டுள்ளன; இது, அல்லாஹ்வின் படைப்பினங்களில் மட்டுமல்ல, மனிதன் படைக்கிற படைப்புகளும்கூட ஜோடி ஜோடியாக அமைந்திருப்பதுதான் மிக ஆச்சரியமான ஒன்றாக இருக்கிறது. இதனைக் குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் அத்தியாயம் 51, வசனம்: 49–ல் பின்வருமாறு குறிப்பிடுகின்றான். “ஒவ்வொரு பொருளையும் (ஆண்–பெண் கொண்ட) ஜோடி ஜோடியாக நாம் சிருஷ்டித்திருக்கின்றோம். (இதனைக்கொண்டு) நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவீர்களாக!

மனிதர்கள், நான்கு கால் பிராணிகள், பறப்பன, ஊர்வன ஆகியவற்றை எதனை எடுத்துக் கொண்டாலும் ஜோடி ஜோடியாக படைக்கப்பட்டுள்ளன. பகல் என்றால் அதற்கு ஜோடியாக இரவு இருக்கிறது. வெளிச்சம் தருவதற்காக சூரியன் இருந்தால், அதே வேலை செய்ய சந்திரனும் ஜோடியாக வந்துவிடுகிறது. மெய் என்ற ஒன்றிருந்தால் அதற்கு ஜோடியாக பொய் ஒன்று வந்து சேர்ந்து விடுகிறது. சத்தியத்திற்கு அசத்தியம் ஜோடியாக உள்ளது. மனிதன் படைக்கக்கூடிய எந்த பொருளும் ஜோடி ஜோடியாகவே இருக்கின்றன. ‘நெகட்டிவ்’ என்ற ஒன்றிருந்தால் அதற்கு ‘பாஸிட்டிவ்’ உடைய துணை தேவைப்படுகிறது. அணுகுண்டிற்குகூட ‘புரோட்டின்–நெப்ட்ரூன்’ ஜோடி தேவைப்படுகிறது. இது போலவே, மனிதனின் ஒவ்வொரு படைப்பிலும்



ஜோடி இருப்பதைப் பார்க்கிறோம். எந்த ஒரு தனிப் பொருளைக் கொண்டும் மனிதனால் உருப்படியாக ஒன்றும் செய்ய முடியவில்லை.

## மரங்களிலும் ஆண்–பெண் ஜோடி!

“மரங்களில்கூட ஜோடி ஜோடியாக இருக்கின்றன. காற்றின் அசைவினால் பெண் மரம் கருத்தரித்து, கனி தருகிறது” என்பது இன்றைய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளில் ஒன்று. இந்த இரகசியத்தைகூட திருக்குர்ஆன் 14–நூற்றாண்டுகளக்கு முன்பே வெளியிட்டு விட்டது என்பதற்கு இதோ ஆதாரம்.

“பூமி முளைப்பிக்கும் (புற்பூண்டு, மரம், செடி, கொடி) யாவற்றையும், இவர்களையும் ஜோடி ஜோடியாகப் படைத்து, இவர்கள் (மனிதர்கள் இதுவரையில்) அறியாத (மற்ற)வற்றையும் படைப்பவன் (அல்லாஹ்) மிகத் தூய்மையானவன்.”

–அத்: 36, வச: 36

இதனைக் கொண்டு நமக்கு என்ன விளங்குகிறது? அல்லாஹ் அருளிய திருக்குர்ஆன் எந்த ஒரு விஷயத்தையும் மனித வர்க்கத்திற்கு விவரிக்காது விட்டு வைக்கவில்லை. அது எவ்வளவு பெரிய விஷயமாக இருந்தாலும் சரி; எவ்வளவு சிறிய விஷயமாக இருந்தாலும் சரி! திருக்குர்ஆன் விவரிக்கும் சில விஷயங்கள் நமக்குப் புதுமையாக இருக்கும்; புரியாதும் இருக்கும்! சில விஷயங்கள் நமக்கு தேவையற்றதாயும் அதனைக்கண்டு நாம், ‘இதெல்லாம் நமக்கெதற்கு?’ என்ற அசிரத்தை காட்டலாம். தற்சமயம் நமக்கு சில விஷயங்கள் தேவையில்லாததாக இருந்தாலும், நம்முடைய வருங்கால சந்ததியினருக்கு அவை கண்டிப்பாகத் தேவைப்படக்கூடியதாகவே இருக்கும். திருக்குர்ஆன்

முக்காலத்திற்கும் (கடந்தகாலம்—நிகழ் காலம்—வருங்காலம் ஆகிய முக்காலம்) தேவைப்படக் கூடியது என்பதற்கு இன்னும் என்ன ஆதாரம் வேண்டியிருக்கிறது?

# 12. உலமாக்களும், முஸ்லிம் விஞ்ஞானிகளும் ஒன்றுபட வேண்டும்!

"மேலும், நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (இஸ்லாம்—குர்ஆன் என்னும்) கயிற்றை பலமாக பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு) நீங்கள் பிரிந்துவிட வேண்டாம்."

—அத்: 3, வச: 103

"திருக்குர்ஆனை ஓதுங்கள்! அதனை மனப்பாடம் செய்யுங்கள்! ஏனெனில், திருக்குர்ஆனை உள்ளடக்கிக் கொண்டிருக்கக்கூடிய இதயத்தை அல்லாஹ் வேதனை செய்ய மாட்டான்." —அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்—அம்)

அல்லாஹ் அருளிய திருக்குர்ஆன் தற்கால விஞ்ஞான வளர்ச்சிக்கு விரோதமானதல்லவென்பதையும், திருக்குர்ஆன் ஒளியில்தான் விஞ்ஞானத்தை ஆராய வேண்டும்; விஞ்ஞானத்தின் ஒளியில் திருக்குர்ஆனை ஆராயக் கூடாதென்பதையும் ஓரளவு நாம் புரிந்து கொண்டோம். இனி அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும்? இதுதான் இன்றைய முக்கிய கேள்வி!

திருக்குர்ஆனிலுள்ள விஞ்ஞானத்தை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டி, அதன் மகிமையையும், பெருமையையும் உலக மக்களின் பார்வையில் உயர்த்திக் காட்ட வேண்டும். இது உலமாக்களால் மட்டும் முடியுமா? அல்லது விஞ்ஞானிகளால் மட்டும் முடியுமா? என்றால் இந்த இரு பிரிவினரும் தனித்தனியாக முயற்சித்தால் கண்டிப்பாக முடியாது என்பதே அனுபவத்தில் கண்ட உண்மை. இவர்களின் இந்த இரண்டு வகை அறிவும் வெவ்வேறு திசையில் பக்குவம் பெற்றவை. எனவே, இந்த இரண்டுவகை அறிவும் ஒன்றாக இணைந்து செயல்பட்டால் கண்டிப்பாக இதில் வெற்றியடைய முடியும்.



## ஆலிம்கள்—விஞ்ஞானிகள் கூட்டு முயற்சி தேவை!

இந்தக் கருத்தை நீண்ட காலமாகவே இரு பிரிவினரும் ஆதரித்துப் பேசியுள்ளனர்; பேசி வருகின்றனர். எழுதியுள்ளனர்; எழுதி வருகின்றனர். செயலுருவில் ஏதேனும் இதுவரை செய்துள்ளனர் என்பதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை. உலமாக்கள் திருக்குர்ஆனை நன்கு தெரிந்துள்ளனர். எனவே, மேற்கொண்டு திருக்குர்ஆன் ஞானம் பெற அவர்களுக்கு அவசியமில்லை. ஆனால் விஞ்ஞானிகள்—குறிப்பாக முஸ்லிம் விஞ்ஞானிகள், போதுமான அளவு திருக்குர்ஆன் ஞானம் பெற்றிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. விதிவிலக்காகவும் சிலர் இதில் இருக்கலாம். முஸ்லிம் விஞ்ஞானிகள் திருக்குர்ஆனை ஓதத் தெரிந்திருக்கலாம். ஆனால், உல மாக்கள் தெரிந்திருக்கக்கூடிய அளவு தெரிந்து வைக்க நியாயமில்லை. எனவேதான், இவ்விரு பிரிவினரும் கூட்டாகச் செயல்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதும் அவசியமாகும்.

"முஸ்லிம் விஞ்ஞானிகள் திருக்குர்ஆனைப் பற்றி விஞ்ஞான ரீதியில் ஆராய முற்படுவதற்கு முன், ஏற்கனவே நம் மூதாதையர்கள் எழுதி வைத்துள்ள திருக்

குர்ஆன் விரிவுரைகளை (தப்ஸீர்) நன்றாக படித்தறிந்து கொள்வது நல்லது''

ஏனெனில், மூதாதையர்கள் எழுதி வைத்துள்ள விரிவுரைகளை கவனித்துக் கொள்ளுமுன், எடுத்த எடுப்பிலேயே தங்களுக்குள்ள ஞானத்தைக் கொண்டு ஆராய முற்படும் பொழுது தவறி விடுவதற்குள்ள சாத்தியக்கூறு உள்ளது என்று விளக்கம் கூறுகிறார்கள்.

## பற்களின் அதிசய அமைப்பு!

திருக்குர்ஆனிலுள்ள வசனங்களிலுள்ள சில சொற்களுக்கு ஒரே பொருள்தான் சில தப்ஸீர்களில் தரப்பட்டுள்ளது. உதாரணமாக அத்தியாயம்–25, வசனம் 6–ல் 'ஸிர்ர' என்ற பதத்திற்கும், அத்தியாயம்–27, வசனம்–25ல் 'கப்' என்ற பதத்திற்கும், அதே அத்தியாயத்தில் வசனம் 75–ல் 'காயிபதின்' என்ற பதத்திற்கும் ஒரே பொருள்தான் தரப்பட்டுள்ளது. இப்படி பல சொற்களுக்கு பல பகுதிகளில் ஒரே பொருள்தான் தரப்பட்டுள்ளது. இவற்றை நாம் மேலும் ஆராய்ந்து ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பொருள்களைக் கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும். உதாரணமாக மனிதனுக்கு அல்லாஹ் பற்களை ஓர் அருட்கொடையாகத் தந்துள்ளான்; பற்களால் ஒரு பொருளை கடிக்கவும், மெல்லவும் செய்யலாம் என்பது ஒரு பொதுவான கருத்தாகும். ஆனால் அதே பற்களைப் பற்றி நாம் சற்று விரிவான முறையில் கீழ்வருமாறு வியாக்கியானம் செய்யலாம். எப்படியெனில் பற்களை அல்லாஹ் மூன்று வகையாகப் படைத்திருக்கிறான். முன் பற்கள்; சிங்கப் பற்கள்; கடைவாய்ப் பற்கள். இவற்றின் அமைப்பு முறையும், அவற்றை உபயோகிக்கும் முறையும் வெவ்வேறு வகையில் இருப்பதை நாம் காணுகிறோம். முன்



பற்கள் எதையும் கடிப்பதற்கு ஏதுவாக கூர்மையாகவும், சப்பையாகவும் இருக்கின்றன. இதற்கு உறுதுணையாக இருக்கும் சிங்கப் பற்கள் மிகவும் கூர்மையாகவும், உறுதியாகவும் இருக்கின்றன. மெல்லுவதற்காக உபயோகிக்கும் கடைவாய்ப் பற்கள் தட்டையாகவும், இரண்டு மூன்று சேர்ந்திருப்பது போலவும், ஒரே சமமாகவும் இருக்கின்றன. அல்லாஹ் இவற்றை இவ்வளவு அழகான அமைப்புடன் படைத்துள்ளான். இதே பற்கள் முன் பக்கமாக தட்டையாகவும், உள் பக்கம் கூர்மையாகவும் அமைந்திருந்தால், மெல்லுவதற்கும், கடிப்பதற்கும் சிரமமாயும், பார்ப்பதற்கும் அருவருப்பாயும் இருக்குமல்லவா?

## முடியின் வித்தியாசமான வளர்ச்சி!

இதேபோன்று மனிதனின் உடலில் மூளைக்கும் உரோமத்தை எடுத்துக் கொள்வோம். உரோமமும் அல்லாஹ் மனிதனுக்கு தந்த ஓர் அருட்கொடையேயாகும். 'அல்லாஹ் மனிதனுக்கு உரோமம் தந்துள்ளான்' என்று கூறுவதைவிட, அந்த உரோமத்தை எந்தெந்த இடத்தில் எந்தெந்த அளவு திட்டப்படுத்தி தந்துள்ளான் என்று விளக்குவது இன்னும் விசேஷமாயிருக்கும். உதாரணமாக, தலை முடி, தாடி முடி, புருவ முடி, இமை முடி என்று எல்லாமே முடியாக இருந்தாலும் ஒவ்வொன்றும் ஒரே அளவாக வளருவதில்லை; தலை முடி போல், தாடி முடிபோல, புருவ முடியும், இமை முடியும் வளர ஆரம்பித்து விட்டால், மனிதனுடைய நிலை என்னாகும்? இப்படிப் பல உதாரணங்களைக் கூறலாம்.

## தடம் புரண்டுவிடக் கூடாது!

எனவே அல்லாஹ் அருளிய திருக்குர்ஆனில் ஒவ்வொரு சொற்களையும் உலமாக்களும், முஸ்லிம் விஞ்

ஞானிகளும் இன்னும் சற்று சிறப்பாக நுணுகி ஆராய்ந்தால், மறைந்து கிடக்கும் இன்னும் பல பொக்கிஷங்கள் மனித சமுதாயத்திற்குக் கிடைக்கும். ஆனால் ஒரு முக்கியமான விஷயத்தை கருத்தில் கொள்வது அவசியமாகும். இவ்விரு பிரிவினரும் திருக்குர்ஆனுடைய வசனங்களில் ஆராய்ச்சி செய்யும்பொழுது, அந்த ஆராய்ச்சி நம் முன்னோர்களின் விளக்கவுரையை அஸ்திவாரமாக கொண்டதாயிருக்க வேண்டுமென்பதை முக்கிய விதியாக கொள்ள வேண்டும். இதில் சற்றேனும் தொய்வு ஏற்பட்டுவிட்டால் நம் முன்னோர்களுக்கு குறிப்பிட்ட இந்த வசனத்திற்கு சரியான விளக்கம்தர இயலவில்லை; காரணம், அவர்களுக்கு முன்னதாக விளக்கம் எழுதிவைத்த 'முபஸ்ஸிரீன்கள்' (திருக்குர்ஆன் வியாக்யானிகள்) இமாம்கள், 'முஹத்திஸீன்கள்' (நபி மொழி விரிவுரையாளர்கள்), 'தபஅ தாபியீன்கள்' (நாயகத்துடைய தோழர்களைப் பார்த்தவர்களை பார்த்தவர்கள்), 'தாபியீன்கள்' (நாயகத்துடைய தோழர்களைப் பார்த்தவர்கள்) ஆகியோருக்கும் இதற்குச் சரியான பொருள்கூற முடியவில்லை. காரணம், நாயகத் தோழர்களுக்கும் புரியவில்லை; மேலும், நாயகத்திற்கும் தெரியவில்லை (நஊதுபில்லாஹ்) என்று விஷயம் வந்துவிடும். இந்த பேராபத்தை விட்டும் இவ்விரு பிரிவினரும் மிக ஜாக்கிரதையாக இருந்து கொள்ள வேண்டும்.

## பட்டியல் போட்டுக்கொள்ள வேண்டும்!

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் என்னென்ன புதுமைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு முதலில் ஒரு பட்டியல் தயாரித்துக் கொள்ள வேண்டும். தங்களுடைய கண்டுபிடிப்புகளுக்கு விஞ்ஞானிகள் கூறும் விளக்கங்களையும் குறித்துக் கொள்ள வேண்டும்; அவை



பற்றிய மற்றவர்களுடைய அபிப்பிராயங்களையும் திரட்டிக் கொள்ள வேண்டும். பிறகு எண் வாரியாகப் பிரித்து விஞ்ஞானிகளுடைய கண்டுபிடிப்புகளுக்கும், விளக்கங்களுக் கும் திருக்குர்ஆன் 1400–ஆண்டுகளுக்கு முன் எந்தெந்த வகையில் விளக்கம் தந்துவிட்டது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும்.

## மனித உற்பத்தி பற்றி திருக்குர்ஆன்!

உதாரணமாக மனித உற்பத்தியை பற்றிய விஷயத்தை எடுத்துக் கொள்வோம். மனிதன் ஆணுடைய இந்திரியத்திலிருந்து உற்பத்தியாகிறான். அந்த இந்திரியம் ஆணின் முதுகுத் தண்டிலிருந்து உற்பத்தி ஆகிறது. அந்த விந்து பெண்ணின் கர்ப்பபையில் தங்கி, கிருமியாக உள்ள ஒரு பூச்சிதான் மனிதனாக தாயின் வயிற்றில் வளர்ச்சியடைந்து குழந்தை ரூபத்தில் வெளியே வருகிறது. இது விஞ்ஞானியின் கணிப்பு; அவன் செய்த ஆராய்ச்சியின் முடிவு. அதுவும் ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்ட விஷயம். இதனையே திருக்குர்ஆன் 14–நூற்றாண்டுகளுக்கு முன் எவ்வளவு நளினமாகவும், தெளிவாகவும் குறிப்பிட் டுள்ளது என்பதைக் கவனிப்போம்.

"(மனிதன்) குதித்து வெளிப்படும் ஒரு துளி ஜலத்தைக் கொண்டே சிருஷ்டிக்கப்பட்டான்; அது முதுகுத் தண்டுக் கும், விலா எலும்புகளுக்கும் மத்தியிலிருந்து வெளிப்படுகின்றது."
—அத்: 86, வச: 6,7

"நிச்சயமாக (ஆரம்பத்தில் 'ஆதம்' என்ற முதல்) மனிதரை களிமண்ணின் சத்திலிருந்து சிருஷ்டித்தோம். பின்னர் நாம் இந்திரியமாக்கி ஒரு பத்திரமான இடத்தில் வைத்தோம். பின்னர், அந்த இந்திரியத்தை இரத்தக் கட்டியாக்கினோம். பின்னர் அவ்விரத்தக் கட்டியை மாமிசப்

பிண்டமாகச் செய்தோம்; பின்னர் அம்மாமிசப் பிண்டத்தி லிருந்து எலும்பை உற்பத்தி செய்து, அவ்வெலும்பிற்கு மாமி சத்தை அணிவித்தோம். பின்னர் அதனை(ப் பூரணமான) மனித சிருஷ்டியாக அமைத்தோம். (இவ்வாறு சிருஷ்டித்த) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன்; (அவன்) சிருஷ்டி கர்த்தாக்களிலெல்லாம் மிக்க அழகானவன்."

—அத்: 23, வச: 12, 13, 14

## 'மதி'யின் விதிமுறைகள்!

மனிதனை அல்லாஹ் எப்படி சிருஷ்டித்தான்? என்பதை இந்த வசனங்களில் மிக அழகாகவும், தெளிவாகவும் காண முடிகிறது. இந்திரியத் துளியிலிருந்து படிப்படியாக மனிதன் எப்படி உற்பத்தியாகிறான் என்பதை இதன்மூலம் நன்கு உணர்ந்து கொள்ளலாம். இந்த ஒவ்வொரு மாறுத லுக்கும் இடைவெளி நாற்பது நாட்கள் என்று சொல்லப்படு கிறது. முதல் வசனத்தில் இந்திரியத்தை 'துள்ளிக் குதிக்கும் ஜலம்' என்று அல்லாஹ் குறிப்பிட்டிருப்பதற்கு காரணம் மனிதன் உணர்ச்சி வசப்படும் பொழுது கெட்டியான நீரைப்போன்ற ஒரு பொருள் மனிதனின் வெட்கஸ்தலத்திலிருந்து கசிந்து வெளிப்படுத்துகிறது. இதற்கு 'மதி' என்ற பெயர் உண்டு. இது வெளிப்படுவதிலிருந்து மனிதன் அசுத்தமடைவதில்லை, குளிக்க வேண்டியத் தேவையுமில்லை, அது பட்ட இடத்தைக் கழுவிக் கொண்டால் போதுமானது. ஏனெனில் இது இந்திரியம் அல்ல. இந்திரியம் வெளிபடும்பொழுது துள்ளிக் கொண்டு வெளியாகும். இதில்தான் மனிதன் உற்பத்தியா கிறான். இப்படி துள்ளி வெளியாகும் பொழுதுதான் மனிதன் அசுத்தமாகிறான், குளிப்பது அவன்மீது கடமையாகிவிடுகிறது.



## மழையைப் பற்றிய விளக்கம்!

இதேபோன்று மற்றோர் உதாரணத்தையும், இங்கு கவனிக்கலாம், மழை பொழிவதைப் பற்றியும், அதன் காரண மாகவே புற்பூண்டுகள் பூமியிலிருந்து முளைக்கின்றன என்பது பற்றியும் நாம் திருக்குர்ஆனில் விளக்கம் காணுகிறோம். விஞ்ஞானிகள் நீண்ட கால ஆராய்ச்சிக்குப் பின்பு தான் மழை பொழிகிறதைப் பற்றியும், புற்பூண்டுகள் விளை கிறதைப் பற்றியும் கண்டுபிடித்தார்கள். அத்தியாயம்: 15, வசனம்: 22—ல் மழையைப் பற்றி பின்வரும் வசனம் காணப் படுகிறது. "மேகம் கருக்கொள்ளும்படியான காற்றையும் நாமே அனுப்பி வைத்திருக்கிறோம்; அம்மேகத்திலிருந்து மழையையும் நாமே பொழியச் செய்கிறோம்."

அடுத்து அம்மழை நீரால் நமக்கு ஆகாரம் எப்படிக் கிடைக்கின்றது என்பதனைக் குறித்து, அத்தியாயம்: 80, வசனம்: 24—லிலிருந்து 27—வரை குறிப்பிட்டுள்ளதை கவனிப்போம் "அன்றி, மனிதன் தன்னுடைய ஆகாரத்தை (அது எங்கிருந்து, எவ்வாறு வருகிறது? என்பதைச் சிறிது) கவனித்துப் பார்க்கவும். நிச்சயமாக, நாமே ஏராளமான நீரை பொழியச் செய்து, பின்னர் அதிலிருந்து வித்துகளை முளைத்து வளரும்படிச் செய்கின்றோம்.

ஆக, இப்படி மனிதனுக்குத் தேவையான எல்லா விஷயங்களையும் அல்லாஹ், தன் திருக்குர்ஆனில் சிறப் பான முறையில் விளக்கம் தந்து விட்டான். இனி அடுத்து நாம் செய்யவேண்டியது என்ன? இதனைத் தான் இன்று சிந்திக்க வேண்டும்; மற்றவர்களைவிட முஸ்லிம்களுக்குதான் இதில் பொறுப்பு அதிகமிருக்கிறது. அவர்கள்தான் திருக்குர் ஆனில் காணும் விஞ்ஞானத்தை மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும். அதில் காணும் நுட்பங்களை விவரிக்க

வேண்டும். அதிலுள்ள பொக்கிஷங்களை வாரி வாரி பாமரர் களுக்கு வழங்கி, அவர்களின் அறிவை விரிவாக்க. வேண் டும். இது முஸ்லிம்கள் பேரிலுள்ள நீங்காக் கடனாகும்.

## மௌலவிகள், ஹாபிஸ்களின் பரிதாப நிலை!

அல்லாஹ்வின் உதவியால் நாடெங்கும் அரபிக் கல்லூரிகள் நிறைந்து காணப்படுகின்றன. வருடந்தோறும் இக்கல்லூரிகளிலிருந்து 'மௌலவி' ஸனது பெற்ற பட்ட தாரிகள் பல்லாயிரக்கணக்கில் வெளிவருகின்றனர். திருக் குர்ஆனை மனனம் செய்த ஹாபிஸ்கள் பல்லாயிரக் கணக்கில் வெளியாகின்றனர். ஆனால், அந்தோ! இவர்கள் சமுதாயத்திற்கு சிறப்பான முறையில் தொண்டு புரிய வாய்ப்புத் தரப்படுவதில்லையே! நீண்ட காலம் சிரமப்பட்டு படித்து ஸனது பெற்று வெளியே வரும் இவர்களுக்கு சமுதாயம், 'இமாமத்' (பேஷ் இமாம்) வேலை அல்லது 'உஸ்தாது' வேலை கொடுத்து, மாத ஊதியமாக 800 அல்லது 900 ரூபாய் அளித்து அவர்களை நிம்மதியாக வாழ வழிவகுப்பதில்லை; இந்தப் படிப்பைப் படித்துப் பட்டம் பெற அவர்கள் இன்றைய நாகரீகச் சூழலில் எவ்வளவோ தியாகங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. எந்தவித தீமையான பழக்கவழக்கங்களிலும் ஈடுபடாது பேணுதலாக வாழவேண்டி யிருக்கிறது. பட்டம் பெற்று வெளியே வந்து வாழ்க்கைப் படகை ஓட்ட ஆரம்பித்த பிறகும்கூட அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியிருக்கிறது. சிறிது தவறு அவர்கள் மூலம் ஏற்பட்டு விட்டாலும், ஆயிரம் ஆள்காட்டி விரல்கள் அவர்களை நோக்கி குத்திட்டு நின்று வசைபாடு கின்றன. ஓர் ஆலிமா இப்படி செய்தார்? ஒரு மௌலவியா இதனைச் செய்தார்? ஒரு ஹாபிளா இந்த வேலையைச் செய்



தார்? என்ற சொல்லம்புகள் அவர்கள் மீது எய்யப்பட்டு, அவர்களின் உள்ளங்கள் சல்லடைக் கண்களாய் துளைக் கப்படுகின்றன.

## இந்த இழிநிலை மாற்றப்பட வேண்டும்!

குற்றங்களை, தீமைகளை அவர்கள் மட்டும்தான் செய்யக்கூடாதா? ஆலிம்களும், ஹாபிள்களும் பிறரைப் போல நிம்மதியாகவும், வயிறு நிறைய சாப்பிட்டு மனைவி, மக்களோடு சுகமாகவும் வாழ சமுதாயம் வழி வகுக்க வேண்டும். அவர்கள் 'இமாமத்' வேலை செய்தாலும், 'உஸ்தாது' வேலை பார்த்தாலும் கை நிறைய, அவர்கள் திருப்திப்படக்கூடிய வகையில் மனந்திறந்து ஊதியமளிக்க வேண்டும். நம்மைப்போல அவர்களும் மனிதர்களே! என்ற உணர்ச்சி நம் சமுதாய மக்களுக்கு வரவேண்டும். தங்க ளுக்கு மட்டும் 'நாலாயிரம் ரூபாய் சம்பளம் போதவில்லை' யென்று குறை கூறிக் கொண்டு, அவர்களுக்கு மட்டும் எண்ணூறு ரூபாய் சம்பளம் கொடுத்து, 'எப்படியும் வாழ்ந்து கொள்!' என்று விட்டுவிட்டால், அவர்களால் என்ன செய்ய முடியும்? 'நிக்காஹ், மவுத், பாத்திஹா வருமானம் அவர்க ளுக்கு கிடைக்கிறதே!, என்று சமாதானம் கூற முன் வரலாம். இந்த வருமானம் நிரந்தரமானதல்ல என்பதை நம் சமுதாய மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். 'மார்க்கக் கல்வி கற்றால் உலக வாழ்வில் வெற்றி காண முடியாது என்ற எண்ணம் இன்று பரவலாக பாமர மக்கள் மனங்களில் பதிந்து வருகிறது. இதன் காரணமாக தாம் பெற்றெடுக்கும் செல்வங்கள் மார்க்கக் கல்வி கற்க யாரும் விரும்புவ தில்லை. இதன் காரணமாக மார்க்கக் கல்வி ஞானம் வரவர குறைந்து கொண்டே போகிறது. இதன் எதிரொலியாக நம் சமுதாயம் இஸ்லாமிய ஆசாரத்தின் உயர்வை உணர முடிவ

தில்லை. இந்த நிலை மாற வேண்டும். கண்டிப்பாக மாற்றப் பட வேண்டும்.

## மார்க்கக் கல்வி கற்க சிறந்தவர்களைத் தேர்ந்தெடுங்கள்!

மார்க்கக் கல்வியைக் கற்க நாம் யாரைத் தேர்ந் தெடுக்கிறோம்? உலகக் கல்வியைக் கற்பதில் அசிரத் தையாக இருந்து, பரீட்சையில் தேர்ச்சியடையாது வருடந் தோறும் மட்டை போடுகிறானே அவனை—பெற்றோர் பேச்சுக்கு அடங்காது சண்டித்தனம் செய்கிறானே அவனை—ஊதாரியாக ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறானே அவனை—மர—மண்டையனாய் மண்டூகமாய் அலைகிறானே அவனை—கால் நொண்டி, கை, முடம், காது செவிடு, கொன்னல் பேச்சு உள்ள அங்கஹீனர்கள் ஆகியவர்களையல்லவா அனுப்புகி றோம்! எதற்கும் உதவாத இவன் மத்ரஸா படிப்பேனும் படித்து தொலையட்டும்!' என்ற நம் அலட்சியப் போக்குதானே இதற்கு காரணம். ஒரு சிலர் விதிவிலக்காய்ருக்கலாம் இந்தப் போக்கிற்கு. இது நியாயந்தானா? மார்க்கக் கல்வி எவ்வளவு உணர்ந்த அந்தஸ்து கொண்டது என்பதை நம்மில் எவ்வளவு பேர் சிந்திக்கின்றனர்? திருக் குர்ஆன் ஞானம் எவ்வளவு சக்தி உள்ளது என்பதைப் பற்றி நம்மில் எத்தனைபேர் ஆராய்கின்றனர்? குருடன் கையிலே நவரத்தினங்களை அள்ளிக் கொடுத்தால் பாவம் அவன் என்ன செய்வான்? அதே நவரத்தினங்களை விவரம் தெரிந்த ஓர் அறிவாளியிடம் கொடுத்தால் அவற்றை கொண்டு அவன் எவ்வளவு நன்மைகளை அடைய முடியும்! எனவேதான் கூறுகிறோம் மார்க்கக் கல்வியைக் கற்க சிறந்த புத்திசாலி சிறார்களைத் தேர்ந்தெடுங்கள்! உங்கள் குடும்பத்தில் ஒருவன் மார்க்க ஞானம் பெறுவதில் வெற்றி



பெற்று விடுவானேயானால் உங்கள் கோத்திரமே நேர்வழி பெற வாய்ப்பை பெற்றுவிடுமே!

சமுதாயத்தில் ஒரு பெரும் புரட்சிப் புயல் வீசிடச் செய்தாக வேண்டும். அதன் பலனாக மார்க்கக் கல்விக்கு சமுதாயத்தில் சிறந்த அந்தஸ்து கிடைக்க வேண்டும். சமுதாயத்திலுள்ள சிறந்த அளிவாளிகளெல்லாம் திருக் குர்ஆன் ஞானம் பெற்றாக வேண்டும். முஸ்லிம் விஞ்ஞா னிகளும், திருக்குர்ஆன் ஞானம் பெற்றுள்ள உலமாக்களும் அடிக்கடி ஒன்றுகூட வேண்டும்; கருத்தரங்குகள் நடத்த வேண்டும்; திருக் குர்ஆன் ஒளியில் காணும் விஞ்ஞானத் தைப் பற்றி பெரும் பெரும் மாநாடுகளை கூட்ட வேண்டும். அவற்றில் பல மத, சமயத் தலைவர்களையெல்லாம் பங்கு பெறச் செய்ய வேண்டும். அவர்கள் முன்னிலையில் திருக்குர்ஆனில் மறைந்து காணப்படும் பொக்கிஷங்க ளையெல்லாம் அவர்களுக்கு வாரி வாரி வழங்க வேண்டும். அவர்களின் அகக் கண்களைத் திறக்கச் செய்து, இந்த திருக்குர்ஆன் முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல; உலக மக்கள் அனைவருக்கும் சொந்தம்! உலக மக்களே! வாருங்கள்! திருக்குர்ஆனில் கவனம் செலுத்துங்கள்! இதில் காணும் செல்வங்களை அள்ளி அள்ளியெடுத்து இக, பர இருலோக வாழ்விலும் ஆனந்த வாழ்வு வாழ்ந்து கொள் ளுங்கள்!' என்ற உண்மையை அவர்கள் உணரச் செய்ய அவர்களுக்கு அழைப்பு விடுங்கள்.

''இது, வேத நூல்! இதில் சந்தேகமே இல்லை! பயபக்தியுடையவர்களக்கு (இது) நேரான வழியைக் காட்டும்.
—அத்: 2, வச: 2

திருக்குர்ஆனில் காணும் இந்தப் பிரகடனத்தை உலக மக்கள் அனைவர் முன்னிலையிலும் நாம் வெளிப்படுத்த

வேண்டும். நேர்வழி பெற யார்தாம் விரும்ப மாட்டார்கள்? மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் விரும்பவே செய்வார்கள். எனவே பிறர் நேர்வழி பெறவும், நாமும் நேர்வழி அடையவும் முயற்சிப்போம்.

"நீர் ஓர் ஆலிமாக இரும்; அல்லது அறிவை கற்பவராக இரும்; அல்லது அறிவைக் கேட்டுப் படிப்பவராக இரும்! எனவே, (இம்மூன்றையும் தவற விட்டு) நான்காமவராக நீர் ஆகிவிடாதீர்! (நீர் நான்காமவராக இருப்பீராயின்) நீர் மோசம் போய் விடுவீர்!" அண்ணல் நபி (ஸல்–அம்) அவர்கள் தம் உம்மத்துகளை (பின் தொடரு பவர்களை)ப் பார்த்து எவ்வளவு நளினமாக உபதேசிக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். தம்மைப் பின்தொடருபவர்கள் அனைவரும் ஆலிமாக–அறிவாளியாக இருக்க வேண்டுமென்பது அண்ணலாரின் அடக்க முடியாத அவா. அறிவைக் கற்றுக் கொள்வதில் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டுமென் பதே அவர்களின் விருப்பம். இதனைத்தான் செயலில் கொண்டுவர வேண்டுகிறோம்.

கல்வியிலே உயர்ந்த கல்வி திருக்குர்ஆன் கல்விதான்! ஈடு இணையற்ற இந்த கல்வியை நாம் எல்லோரும் கற்போம்! இதனைக் கற்று இம்மை–மறுமை இரண்டிலும் வெற்றி காண்போம். எல்லாம்வல்ல அல்லாஹ் முஸ்லிம்களாயுள்ள நம்மனைவருக்கும் திருக்குர்ஆனில் பாண்டித்யம் பெறும் பாக்கியத்தை தந்தருள்வானாக. ஆமீன்!